
# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL Tamil Monthly தமிழ் மாத இதழ்

மலர் : 7 இதழ்: 6 மார்ச் : 2023 ரூ.20/-
Volume: 7 Issue: 6 March : 2023 Rs.20/-



## SHRI MAHA MERU MANDALI TRUST

Reg. No.DIT (E) No.2 (651) 12-13/Sl.No.90/13-14



# அஷ்டோத்ர ஸத சுக்ர வார ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயணம்

**27வது பாராயணம் - 10.02.2023 வெள்ளிக்கிழமை**
**ஸ்ரீ கருணாம்பிகை ஸமேத தண்டீஸ்வரர் திருக்கோயில்**
வேளச்சேரி, சென்னை - 42.

**28வது பாராயணம் - 17.02.2023 வெள்ளிக்கிழமை**
**அருள்மிகு திருவீதி அம்மன் ஆலயம், புற்றுக்கோயில்**
வேளச்சேரி, சென்னை - 42.

**29வது பாராயணம் - 24.02.2023 வெள்ளிக்கிழமை**
**ஸ்ரீ ஞானசித்தி விநாயகர் ஆலயம்**
அன்னை இந்திராநகர், வேளச்சேரி, சென்னை - 42.

**30வது பாராயணம் - 03.03.2023 வெள்ளிக்கிழமை**
**ஸ்ரீ சர்வபிரியா மஹாகணபதி கோயில்**
மூர்த்தி தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 17.

**31வது பாராயணம் - 10.03.2023 வெள்ளிக்கிழமை**
**ஸ்ரீ காளஹஸ்தீஸ்வரர் திருக்கோயில்**
பவளக்காரன் தெரு, பாரீஸ்கார்னர், சென்னை - 1.

**32வது பாராயணம் - 17.03.2023 வெள்ளிக்கிழமை**
**ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர் கோயில்**
நன்மங்கலம், சென்னை.

**தொடர்ந்து 108 கோவில்களில் பிரதி வெள்ளிக்கிழமை நடைபெற உள்ள ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயண வைபவத்தில் நாமும் பங்கு பெறுவோம்.**

**மேலும் தொடர்புக்கு : 9444060346**

# வேதபாரதி
## செய்திகள்



**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

*இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.*

## வேதமந்திரம் - 43

**த[1]ஸ்ய மே த[1]த்[1]ர ந லோம ச மா மீயதே[1]**

**- கௌ[1]ஷீத[1]கி[1]ப்[3]ராஹ்மணோபநிஷத்[1]**

**பொருள் :** *ஆத்ம ஞானத்தினால் பாவங்களை அழித்துக் கொள்ள வேண்டும். மறுபிறவிக்குக் காரணம் பாவம் மட்டுமல்ல; புண்யமும் கூட. ஞானத்தினால்தான் பாவ புண்யம் என்ற இரு விலங்குகளையும் உடைக்க முடியும். இந்த மேற்கூறிய உபநிஷத் மந்திரம் தேவேந்திரன் ப்ரதர்த்தனுக்கு கூறியதாகும்.*

*|| ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: |*

# வேதபாரதி செய்திகள்

**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 7 இதழ்: 6

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்

**ஆர்.வெங்கட்ராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

REGD No : TN/CC(S) / DN / 571 / 21-23

RNI No : 1282188

Title Code : TNTAM/2016/73726

R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**

(Tamil Monthly Magazine)

Published on : 1-7th (1st Week) Every Month

TN/PM G (CCR) / WPP 605/21-23 /
Valid from 01.01.2021 to 31.12.2023

புத்தக வடிவமைப்பு :
**ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்**
நெ.17, பாரதிதெரு, இந்திராநகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,
செ - 42. போன்: 9025864231


## புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| ஒரு நிமிடம் உங்களோடு... | 5 |
| பங்குனி மாத விசேஷங்கள் | 7 |
| அட்டைப்பட விளக்கம் | 8 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 10 |
| ஸ்ரீமத் பாகவதம் | 13 |
| ஸ்ரீ ஆதிசங்கரர் | 16 |
| அறுபத்தி மூன்று நாயன்மார்கள் | 19 |
| மஹாபெரியவாளின் அற்புத விளக்கங்கள் | 21 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் | 22 |
| தர்மத்தின் குரல் | 23 |
| தெரிந்து கொள்வோம் | 24 |
| ஔவையார் | 26 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 31 |
| சாதனைப்பறவைகள் | 34 |
| மதுவந்தி | 39 |
| இராமாயணம் காட்டும் பாதை | 46 |
| மழையும் விராடபருவமும் | 49 |



**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.200 |
| 10 வருட சந்தா | ரூ.1500 |

வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட

**VEDABHARATHI**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010005286**
**IFSC : CIUB 0000262**



நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.

**D. சூரியநாராயணன்**
**Cell : 98841 05302**

**R. வெங்கட்ராமன்**
**Cell : 94434 95950**

Email:vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

# ஒரு நிமிடம் உங்களோடு...

## 57. மரபு

**'மரபு'** என்றால் **'வழக்கம்'** என்று பொருள். நம் முன்னோர்கள் எப்பொருளை எச்சொல்லால் விளக்கினார்களோ அப்பொருளை அவ்வாறே வழங்குவதுதான் **'மரபு'.**

**எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறு உயர்ந்தோர்**
**செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே.**

(நன்னூல் நூற்பா எண் 387)

**பொருள்** = அறிவுடையோர் எந்தப் பொருளை எந்தச் சொல்லால் எந்த முறைப்படி குறிப்பிட்டார்களோ அதே முறைப்படி வழங்குதல் மரபாகும்.

பண்பாட்டின் எல்லா நிலைகளிலும் மக்களால் பின்பற்றப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதியே 'மரபு' (Tradition).

சித்ரகூடத்தில் இருந்த ராமனை பரதன் போய் பார்த்து அவரை வணங்கினான். ராமனுக்கு தன் தந்தை இறந்ததும், பரதன் நாட்டை ஆளவில்லை என்பதும் தெரியாது. பரதன் நாடாளுகின்றான் என்று நினைத்து அதைப்பற்றி பரதனிடம் பல கேள்விகளை கேட்கிறார். 'பரதா! பகலில் தூங்காமல் இருக்கிறாயா? மந்திரிகளை அடிக்கடி மாற்றாமல் இருக்கிறாயா? அந்தப்புர விஷயங்களை நாட்டில் பேசாமலும் ராஜசபை விஷயங்களை அந்தப்புரத்திலும் கூறாமல் இருக்கிறாயா? என்று கேட்டுவிட்டு கடைசியாக 'நம் முன்னோர்கள் ஏற்படுத்திய மரபுகளை மாற்றாமல் ராஜ்யத்தை ஆள்கிறாயா? என்று கேட்கிறார்.

அதைக்கேட்ட பரதன் 'ராமா! நீ மாற்றப் பார்த்தாய். அதை சரிப்படுத்த தான் இங்கு வந்துள்ளேன்.' என்றான்.

ராமனுக்கு புரியவில்லை, பரதன் தொடர்ந்தான். ’ராமா! மூத்தவன் இருக்க இளையவனுக்கு பட்டம் என்பது நம் குல மரபல்ல. நீ காட்டிற்கு போய் எனக்கு பட்டாபிஷேகம் செய்ய நினைத்தாய். அதனால் நீதான் நம் மரபை மாற்றிவிட்டாய் என்றான்.
உடனே ராமன் ’கொடுத்த சொல்லையும், வரத்தையும் மாற்றக்கூடாது என்பது நம் குலத்தின் மரபு. அதனால்தான் தந்தை சொல்படி நான் காட்டிற்கு வந்துள்ளேன்’ என்றானாம். இதிலிருந்து நாம் அறியவேண்டியது ’மரபுகள் என்றும் மாறக்கூடாது’.

**D. சூரியநாராயணன்**

**8ஆம் ஆண்டு மாசி மஹ ப்ரம்ஹோத்ஸவ ஷடங்க ஷகித ருக் வேத ஜடா பாராயண யஜுர் வேத க்ரம பாராயண சாம வேத அதர்வ வேத பாராயணம்**

ஸ்ரீ கைலாச கனபாடிகள் குருஜி கும்பகோணம் அவர்கள் தலைமையில் 25.02.2023 முதல் 06.03.2023 வரை கும்பகோணம் ஸ்ரீ விஜய வல்லி, சுதர்சன வல்லி ஸமேத ஸ்ரீ சக்கரபாணி ஸ்வாமி ஸன்னதி, ஸ்ரீ மங்களாம்பிகா ஸமேத ஸ்ரீ ஆதிகும்பேஸ்வரர் ஸன்னதியில் விமர்சையாக வேத விற்பன்னர்களால் நடந்துகொண்டு வருகிறது.

வேதபாரதி தனது ஸாஷ்டாங்க நமஸ்காரங்களை வேத விற்பன்னர்களுக்கும், ஸ்ரீ கைலாச கனபாடிகள் குருஜிக்கும் ஸமர்ப்பணம் செய்கிறது.

தொடர்புக்கு : **99947 52907**

## சுபக்ருது வருஷம் - பங்குனி மாத விசேஷங்கள்
### (மார்ச் 15.03.2023 முதல் ஏப்ரல் 13.04.2023 வரை)

| | | | |
|---|---|---|---|
| 15.03.2023 | பங் 1 | புதன் | காரடையான் நோன்பு |
| 17.03.2023 | பங் 3 | வெள்ளி | ஏகாதசி |
| 19.03.2023 | பங் 5 | ஞாயிறு | ப்ரதோஷம் |
| 21.03.2023 | பங் 7 | செவ்வாய் | அமாவாஸை |
| 22.03.2023 | பங் 8 | புதன் | தெலுங்கு வருஷப் பிறப்பு |
| 25.03.2023 | பங் 11 | சனி | சதுர்த்தி |
| 26.03.2023 | பங் 12 | ஞாயிறு | க்ருத்திகை |
| 27.03.2023 | பங் 13 | திங்கள் | ஷஷ்டி |
| 30.03.2023 | பங் 16 | வியாழன் | ஸ்ரீராம நவமி |
| 01.04.2023 | பங் 18 | சனி | ஏகாதசி |
| 03.04.2023 | பங் 20 | திங்கள் | ப்ரதோஷம் |
| 04.04.2023 | பங் 21 | செவ்வாய் | பங்குனி உத்திரம் |
| 06.04.2023 | பங் 23 | வியாழன் | பௌர்ணமி |
| 09.04.2023 | பங் 26 | ஞாயிறு | சங்கடஹர சதுர்த்தி |
| 10.04.2023 | பங் 27 | திங்கள் | அனுஷம் |
| 11.04.2023 | பங் 28 | செவ்வாய் | ஷஷ்டி |

### 21.03.2023 செவ்வாய்க்கிழமை - அமாவாஸை

ஸ்ரீ சுபகிருது நாம ஸம்வத்ஸரே உத்தராயணே சசிர ருதௌ, மீன மாஸே, க்ருஷ்ணபக்ஷே, அமாவாஸ்யாம் புண்யதிதௌ வாஸர: வாஸரஸ்து பௌம வாஸர யுக்தாயாம் பூர்வப்ரோஷ்டபதா நக்ஷத்ர யுக்தாயாம், விஷ்ணு யோக விஷ்ணுகரண, ஏவம்குண ஸகல விசேஷண விஸிஷ்டாயாம், அஸ்யாம், அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ.

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042. Editor : **R. VENKATARAMAN, 9443495950**

## அட்டைப்பட விளக்கம்

## மாசி மகம்

தமிழ் மாதங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதத்தில் சிறப்பு வாய்ந்தது. அந்த மாதங்களில் சிறப்பான மாதம் என்று அழைக்கப்படுவது **'மாசி மாதம்'.**

பொதுவாக **'மஹம்'** நட்க்ஷத்திரம் மிகவும் சிறப்பு வாய்ந்த நக்ஷத்திரம். **'மஹம் ஜகம் ஆளும்'** என்பார்கள்.

இந்த மாசி மாதம், பௌர்ணமி, மகா நக்ஷத்திரம் ஆகிய மூன்றும் ஒன்று சேரும் நாள்தான் **'மாசி மகம்'** என்று அழைக்கப்படுகிறது. இந்த நாள் எல்லா தெய்வங்களுக்கும் மிகவும் விசேஷமான நாள்.

இந்த நாள்

1. சிவபெருமான் வருணபகவானுக்கு வரம் கொடுத்த நாள்.
2. அன்னை ஜகன் மாதா தக்ஷனுக்கு மகளாக தாக்ஷாயனி என்ற திருநாமத்தோடு அவதரித்த நாள்.
3. ஸ்ரீமான் நாராயணன் பூமி தேவியை காப்பாற்றுவதற்காக வராஹ அவதாரம் எடுத்த நாள்
4. முருகப்பெருமான் தன் தந்தையாகிய சிவபெருமானுக்கு பிரணவ மந்திரத்தை உபதேசித்த நாளாக இந்த திருநாள் சொல்லப்படுகிறது.
5. மன்மதன் எரிக்கப்பட்டதும் இந்த நாள்தான்.
6. எல்லா கோயில்களிலும் இந்த நாளில்தான் தெப்போத்ஸவம் நடைபெறும்.

இந்த மாசி மகத்தை **'கடலாடும் விழா'**

*என்பார்கள். மாசி மகத்தன்று புனித நீர் நிலைகள். நதிகள், ஆறுகள் போன்றநீர் நிலைகளில் நீராடுவதை* **'பித்ரு மஹா ஸ்நானம்'** *என்கிறது சாஸ்த்திரம்.*

*திருஞான சம்பந்தர் மயிலை வந்து கபாலீஸ்வரரை பாடியபோது இந்த கடலாடு விழா பற்றி கீழ்க்கண்டவாறு பாடினார்.*

**மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்**

**கடலாட்டுக் கண்டான் கபாலி சரமமர்ந்தான்.**

*கும்பகோணத்தில் உள்ள கும்பேஸ்வரர் கோயிலில் மாசிமகத் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறும். அன்றைய தினம் கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதை, காவேரி, சிந்து, கோதாவரி, சரயு, தாமிரபரணி ஆகிய புண்ணிய நதிகள் கும்பேசுவரர் கோவிலில் உள்ள குளத்தில் வந்து சேர்வதாக ஐதீகம்.*

*இந்த ஆண்டு* **'மாசி மகம்'** *06.03.2023 அன்று வருகிறது. 'மகம்' நக்ஷத்திரம் மார்ச் 05ஆம் தேதி இரவு 9-30 மணிக்கு துவங்கி, மார்ச் 07ஆம் தேதி நள்ளிரவு 12-05 மணிவரை தொடர்கிறது. அதே சமயம் 'பௌர்ணமி' மார்ச் 06ஆம் தேதி மாலை 05-39 மணிக்கு துவங்கி மார்ச் 07ஆம் தேதி இரவு 07-14 வரை நீடிக்கிறது. ஆகவே 06-03-2023 அன்று 'மாசி மகம்' கொண்டாடப்படவுள்ளது.*

*இந்த நாளில் புனித நீராடி விரதம் இருந்தால் பித்ரு தோஷம் நீங்கும் பலவித நன்மைகள் கிடைக்கும் என்பது ஐதீகம்.*

**D. சூரியநாராயணன்**

*பிரதி வாரம் 5 நாட்கள் வேத வகுப்புகள் நடந்து கொண்டிருக்கின்றன. வார இறுதி நாட்களிலும் தனி வேத வகுப்புகள் ருக், யஜுர், சாம, வேதங்களும் நடந்து கொண்டுள்ளது.*

*தொடர்புக்கு :* **ஸ்ரீ சங்கர் - 94451 02193**

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

D. சூரியநாராயணன் பகுதி - 47

## அத்தியாயம் – 2
## "ஸாங்கிய யோகம்"

**ராக$^{3}$த்வேஷவியுக்தைஸ்து விஷயாநிந்த்$^{3}$ரியைஸ்சரந் /**
**ஆத்மவஸ்யைர்விதே$^{4}$யாத்மா ப்ரஸாத$^{3}$மதி$^{4}$க$^{3}$ச்ச$^{2}$தி //**

**(கீதை 2-64)**

**பொருள்** = ஆனால், தன்வசப்பட்ட மனத்துடைய சாதகன் விருப்பு-வெறுப்புகளின்றித் தன்னால் வசப்படுத்தப்பட்ட புலன்கள் மூலம் போக விஷயங்களில் சஞ்சரித்துக் கொண்டு உள்ளத் தெளிவை அடைகிறான்.

**விளக்கம்** = 'எவன் தன் விருப்பு வெறுப்புக்களை விலக்கி ஐம்புலன்களையும் உள்ளத்தால் கட்டுப்படுத்தி தன்னடக்கத்துடன் நடந்துகொள்கிறானோ அவன் மனசாந்தியை அடைகிறான்' என்கிறார் பகவான் ஸ்ரீகிருஷ்ணர்.

துன்பம் வந்தால் அதனை வெறுக்காமலும், இன்பம் வந்தால் அதனால் மகிழ்ச்சி அடையாமலும், அனைத்தையும் ஒரே மாதிரி எண்ணத்தில் பார்க்கும்போது அவன் உள்ளத்தெளிவு அடைகிறான்.

**ப்ரஸாதே$^{3}$ ஸர்வது$^{3}$கா$^{2}$னாம் ஹானிரஸ்யோபஜாயதே /**
**ப்ரஸன்ன சேதஸோ ஹ்யாஸு பு$^{3}$த்$^{3}$தி $^{4}$ பர்யவதிஷ்$^{2}$டதே //**

**(கீதை 2-65)**

**பொருள்** = உள்ளத் தெளிவு ஏற்பட்டுவிட்டால், ஒருவனுடைய எல்லா துக்கங்களுக்கும் அழிவு ஏற்பட்டுவிடும். தெளிவடைந்த மனமுள்ள கர்மயோகியின் புத்தி விரைவிலேயே எல்லா

*விஷயங்களிலிருந்தும் விலகிப் பரமாத்மா ஒன்றிலேயே நன்கு ஸ்திரமாகிவிடுகிறது.*

**விளக்கம்** = *மனம் அமைதியாக இருக்கும்போது எல்லா துக்கங்களுக்கும் அழிவு உண்டாகிறது, விரைவில் புத்தி உறுதிபெறுகிறது. எல்லா துக்கங்களையும் பகவானுடைய பிரசாதமாக ஏற்காமல் துக்கப்படுபவன் உண்மையான பக்தன் அல்ல. சுகம் வந்தால் அதன் பின் ஒரு துக்கம் வரும். லாபம் உண்டானால் பின்னால் நஷ்டமும் உண்டாகும். உடல் உலகத்திற்கு உள்ளம் பகவானுக்கு என்று வாழவேண்டும்.*

*பாலுக்கு புரையூற்றியபின் அது தயிராக உறையும்வரையில் அந்த பாத்திரத்தை அசைவில்லாமல் ஒரு இடத்தில் வைக்கவேண்டும். அசைந்தாலோ அல்லது இடம் மாற்றி வைத்தாலோ அது நல்ல தயிராகாது. இது போல் மனதை ஈஸ்வரனிடத்தில் வைத்தால் அது அமைதி பெறும்.*

**நாஸ்தி பு3த்தி4ரயுக்தஸ்ய ந சாயுக்தஸ்ய பா4வனா** /
**ந சாபா4வயத: ஸாந்தி: அஸாந்தஸ்ய குத: ஸுக2ம்** //

*(கீதை 2-66)*

**பொருள்** = மனதையும் புலன்களையும் வெற்றி கொள்ளாதவனுக்கு நிச்சயமான புத்தி இருக்காது. உறுதியான புத்தியற்றவனுக்கு மனத்தில் பாவனையும் தோன்றாது. அவ்வாறே பாவனையற்றவனுக்கு அமைதியும் கிடைக்காது. அமைதியற்றவனுக்கு சுகம் ஏது?

**விளக்கம்**= *பகவான் அர்ஜுனனிடம் புலன்களை அடக்கத் தெரியாதவனுக்கு ஞானமும் நிலையான அறிவோ உண்டாகாது. அவனுக்கு ஞானத்தைப் பற்றிய சிந்தையே எழாது. அப்படிப்பட்டவனுக்கு வாழ்வில் சுகம் எப்படி உண்டாகும்?*

ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசம்

குயவன் வேகாத மண்ணால் சட்டிகளும், பானைகளும் செய்து அவைகளை நெருப்பில் சுடுகிறான். அப்படி சுட்ட பானைகளை உடைத்து மண்ணாக்கி மீண்டும் அவனால் பானை செய்ய முடியாது. இது போல் உலக ஆசையாகிய நெருப்பால் வெந்துபோன ஒருவனுடைய மனதில் உயர்ந்த மனோபாவங்கள் உண்டாகாது.

கீதை தொடரும்...


**வாழ்த்துகிறோம்**

**23.02.2023 வியாழக்கிழமை** அன்று திருப்பூர் விஷ்ணு ஸஹஸ்ரநாம மண்டலியின் ஆரம்பகால உறுப்பினருமாகிய திரு.D.சிவக்குமார்-ஸ்ரீமதி.தாக்ஷாயினி குமாரன் சிரஞ்ஜீவி.**S.விக்னேஷ்குமார்**
ஸ்ரீ அபிநந்தன் - ஸ்ரீமதி லலிதா அவர்களின் புதல்வி சௌ.**A.மாலினி** அவர்கள்

திருமணம் **திருப்பூர் கணேஷ் மஹாலில்** நடைபெற்றது. மண்டலியின் தலைவர் Dr.K.நடராஜன் மற்றும் மண்டலி உறுப்பினர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள். மணமக்கள் நீடூழி வாழ வேதபாரதி வாழ்த்துகிறது..

**ஸ்ரீ கோகுல கிருஷ்ணா கோசாலை**
**ஸ்ரீ கிருஷ்ணாமிருதம் பப்ளிக் சாரிடபள் ட்ரஸ்ட்**
**(80 G Available)**

**756 பசுக்கள் பராமரிப்பு செய்யும் ஸ்தாபனம்**
**1. கோ பூஜை செய்ய 2. கோ தானம் செய்ய**
**3. பசு பராமரிப்பு செய்ய**
**4. பிதுர்கள் திருப்தி அடைய –**
**(மஹாளய பட்ச காலத்தில்)**



பசு பாதுகாப்பு செய்வது கோடிபுண்ணியம்

தொடர்பு : **ஸ்ரீ நடராஜன்**
ஊத்துக்கோட்டை, திருவள்ளூர் - 602 023
**8940224744 / 9363111799**

# ஸ்ரீமத் பாகவதம்

*(ஸத்யம் பரம் தீமஹி)*

பரிதி

பகுதி - 27

*ஸ்கந்தம் 3 அத்தியாயம் 20 நான்முகன் பிரம்மாவின் ஸ்ருஷ்ட்டியை விளக்குகிறது.*

**கபில பகவான் அவதாரம்**

*பகவான் எடுத்த அவதாரங்களில் 5ஆவது அவதாரம் மிக முக்கியமான 'கபிலர்' அவதாரம். ஆன்மீக கருத்துக்களையும், ஆன்மீக ஞானத்தையும் அனைவருக்கும் போதிக்கவேண்டும் என்பதற்காக பகவான் எடுத்த அவதாரம் தான் 'கபிலர்' அவதாரம். 3ஆவது ஸ்கந்தத்தில் அத்தியாயம் 21 முதல் 32 வரை, அதாவது 13 அத்தியாயங்களில் 594 ஸ்லோகங்களில்* **'கபிலர்'** *அவதாரம் வர்ணிக்கப்பட்டுள்ளது. இந்த ஸ்ரீகபிலவாசுதேவரின் சரித்திரம் ஒரு மஹா புண்ணிய சரித்திரம்.*

*பிரம்மா தன்னுடைய புத்திரர்களில் ஒருவரும் பத்து பிரஜாபதிகளில் ஒருவருமான 'கர்தம பிரஜாபதி'யிடம் சிருஷ்டியைத் தொடங்குமாறு உத்திரவிட்டார். அதை ஏற்ற கர்தம பிரஜாபதி சரஸ்வதி நதி தீரத்திற்குச் சென்று சிருஷ்டிக்கும் தன்மையைப் பெற பகவானைக் குறித்து பல ஆயிரம் வருடங்கள் தவம் செய்தார். அவருடைய தவத்தை மெச்சி பகவான் நாராயணன் லக்ஷ்மி சமேதராய் கருடன் மீது ஆரோஹணித்து காட்சி கொடுத்தார். அவரைக் கண்ட கர்தமப் பிரஜாபதி ஆனந்தம் மேலிட்டு கீழே விழுந்து நமஸ்கரித்து பகவானைத் துதித்தார். அதனால் ப்ரீதியடைந்த பகவான் அவர் தவம் செய்த நோக்கத்தை உணர்ந்து கர்த்தமரிடன் 'அன்பரே உம்மைப் போன்ற*

'உண்மையான பக்தர்களின் கோரிக்கை நிறைவேறாமல் போகாது. ஏழுகடலுடன் கூடிய இந்த பூமியை ஆள்கிற சக்ரவர்த்தியான ஸ்வாயம்பு மனு தன் பத்தினியான சதரூபையுடன் உங்களைக் காண வருவார். அவர்கள் தங்களுடைய புத்திரியான 'தேவஹூதியை உமக்கு திருமணம் செய்துவைப்பார்கள். நான் எனது அம்சத்தோடு உங்களுக்கு மகனாக அவதரித்து சாங்க்ய சாஸ்திரத்தை உலகிற்கு உபதேசிக்கப்போகிறேன்' என்று கூறிவிட்டு பகவான் மறைந்துவிட்டார்.

கற்புக்கரசியான தேவஹூதி தன் கணவரின் ஆஸ்ரமத்திலேயே தன் கணவரின் உள்ளத்தைப் புரிந்துகொண்டு அந்தரங்க பக்தியோடு கணவருக்கு சிசுருஷைகள் செய்து வந்தார். கர்த்தமர் நீண்ட வருடங்கள் தவத்திலேயே இருக்கிறார். பல வருடங்களுக்குப் பிறகு தேவஹூதியிடம் கிருபை தோன்றி பகவானுடைய ஆக்ஞைப்படியே பகவான் ஞான கலையோடு தேவஹூதியின் கர்பத்தில் கபில ரூபனாக பிரவேசம் செய்கிறார். நாட்கள் நகர்ந்தன. குறித்த சுபவேளையில் பகவான் நாராயணன் தேவஹூதியின் உதரத்திலிருந்து கபில மஹரிஷியாக அவதரித்தார்.

மஹா தபஸ்வியான கர்த்தம பிரஜாபதி பிறந்திருப்பது தன் பிள்ளை என்பதையும் மறந்து கபிலரை விழுந்து நமஸ்கரித்து 'ஹே பிரபோ தாங்கள் முன்பு என்னிடம் என் மகவாய்ப் பிறப்பதாகக் கூறிய வாக்கை மெய்ப்பித்தீர்கள். நான்கு கரங்கள் உடைய திருமேனியை விட்டு இரு கரங்களோடு மானிட உருவம் கொண்டீர். ஐஸ்வர்யம், வைராக்யம், யசஸ், அறிவு, வீரம், செல்வம் ஆகிய ஆறு குணங்கள் ஒன்றிணைந்த 'பக' என்னும் குணம் உடைய

*'பகவானாகிய' தங்களை சரணடைகிறேன்'. இனி எனக்கு வேண்டியது ஏதுமில்லை. பரமானந்தத்தில் திளைத்துக்கொண்டிருக்கும் நான் இப்படியே சன்யாச ஆஸ்ரமத்தை மேற்கொண்டு தங்களை பூஜிக்கிறேன்' என்று கூறி நமஸ்கரித்தார் (அத்தியாயம் 24, ஸ்லோகம் 32, 33, 34)*

*பகவான் கபிலர் கர்த்தமரிடம் 'முனிவரே, நான் முன்பு உம்மிடம் கூறியதை மெய்பிக்கவே உமக்கு மகனாகப் பிறந்தேன். உமக்கு அனுமதி அளிக்கின்றேன் என்னை ஹ்ருதயத்தில் வைத்துக்கொண்டு நீங்கள் துறவறம் மேற்கொள்ளலாம். நான் தாயாருக்கு எல்லா கர்மாக்களையும் வேருடன் நாசஞ் செய்கிற ஆத்ம வித்தையை உபதேசிக்கப் போகிறேன். அந்த வித்யையால் ஸம்ஸாரபயத்தை அவள் தாண்டப்போகிறாள்' என்கிறார். (அத்தியாயம் 24, ஸ்லோகம் 39, 40)*

*பகவான் சொன்னதைக் கேட்ட கர்தமர் கபில பகவானை விழுந்து நமஸ்கரித்துவிட்டு யாரிடமும் சொல்லாமல் புறப்பட்டுவிட்டார். அதன் பின் எதிலும் பற்றின்றிச் சுற்றி திரிந்து பகவத் கதி அடைந்தார் என்கிறது பாகவதம்.*

**இச்சாத்வேஷ விஹீநேந ஸர்வத்ர ஸமசேதஸா/**
**பகவத்பக்தியுக்தேன ப்ராப்தா பாகவதீ கதி: //**

**(பாக ஸ்க 3, அத் 24, ஸ்லோகம் 47)**

**பொருள்=** *விருப்பும் வெறுப்புமற்றவரும் எல்லாவற்றிலும் ஸமமான புத்தியுடையவரும், பகவத் பக்தியுள்ளவருமான அவரால் பகவத் கதி அடையப்பட்டது.*

*தொடரும்...*

அத்வைத ஆசான்

# ஸ்ரீ ஆதிசங்கரர்

**ஆதவன் அத்தியாயம் – 6 அவதார மஹிமை பாகம் 18**

## குருவைத் தேடி

ச்ருங்ககிரியிலிருந்து வடக்கு நோக்கி யாத்திரையை தொடர்ந்த சங்கரர் ஸந்யாஸிகளின் கோஷ்டியில் கலந்துகொண்டு பயணத்தைத் தொடர்ந்தார். இரவு நேரங்களில் ஏதாவது ஒரு இடத்தில் ஸந்யாஸிகள் அக்னி மூட்டிச் சமையல் செய்வார்கள். சங்கரரும் அவர்களுடனேயே தங்குவார். இவ்வாறு மூன்றரை மாதங்கள் நடந்து மத்தியபிரதேசத்தில் நர்மதா நதிக்கரையில் உள்ள ஓங்காரேஸ்வரத்தை அடைந்தார். அங்கு ஓங்காரேஸ்வரரை தரிசனம் செய்யும்போது கீழ்கண்ட ஸ்தோத்ரம் சொல்லி துதித்தார்.

**காவேரிகா நர்மதயோ பவித்ரே ஸமாகமே ஸஜ்ஜன தாரணாய /**
**ஸதைவ மாந்தாத்ருபுரே வஸந்த ஓங்காரமீஸம் ஸிவமேகமீடே //**

**(த்வாதஸ லிங்க ஸ்தோத்ரம் – 4)**

**பொருள்** = காவேரி (தென்னிந்திய காவேரி அல்ல) நர்மதை ஆகிய நதிகள் சங்கமிக்கும் தூய்மையான மாந்தாத்ருபுரம் என்னுமிடத்தில் உறைபவரும், பக்தர்களைக் கரையேற்றுபவருமான ஓங்காரேஸ்வரரின் பாதங்களைத் தொழுகிறேன்.

பிறகு அங்கு வசித்துவந்த தவ ஸ்ரேஷ்டர்கள் சிலரிடம் ’கோவிந்த பகவத் பாதரைக் குறித்து கேட்டார். அவர்கள் சங்கரரிடம் ஒரு குகையைக் காண்பித்து ’அந்த குகையில் வெகு காலமாக ஒரு மஹான் ஆழ்ந்த சமாதி நிலையில் இருக்கிறார். அவர்

*ப்ரஹ்மத்தை உணர்ந்த ஞானியைப் போல் இருக்கிறார் தாங்கள் தேடுபவர் அவராக இருக்கலாம்' சென்று பாருங்கள்' என்று பக்தியுடன் மரியாதையுடனும் கூறினார்கள்.*

*அவர்கள் கூறியதைக் கேட்ட ஸ்ரீசங்கரர் மிகுந்த சந்தோஷத்துடன் அந்த குகையை அடைந்து அந்த குகையை மூன்று முறை வலம் வந்து உள்ளே நுழைகிறார். அங்கு கோவிந்த பகவத்பாதர் யோகஸ்திதியில் இருப்பதைக் காண்கிறார். அவர் அருகே சென்று ஸ்ரீ சங்கரர் கண்கள் இமைக்காமல் குருநாதரின் உருவத்தைப் பார்த்துக்கொண்டே கீழ்கண்ட ஸ்லோகத்தை உச்சரித்தார்.*

**ஸர்வ வேதாந்த-ஸித்தாந்த-கோசரம் தமகோசரம்/**
**கோவிந்தம் பரமானந்தம் ஸத்குரும் ப்ரணதோஸ்ம்ய//**

**பொருள்** = *வாக்குக்கும் மனதுக்கும் எட்டாதவரும், எல்லா வேதங்களின் முடிவான சித்தாந்த வாக்கியங்களிலிருந்து தெளிந்த புத்தியால் அறியக்கூடியவரும், சிறந்த ஆனந்த ரூபியும், நல்ல குருவும் ஆகிய கோவிந்தரை நான் நமஸ்கரிக்கிறேன்.*

*(பிற்காலத்தில் இந்த ஸ்லோகம் ஸ்ரீசங்கரர் இயற்றிய பிரகரண கிரந்தங்களில் ஒன்றான* **'விவேக சூடாமணி' யில் 'மங்களாசரணமாக',** *முதல் ஸ்லோகமாக சேர்க்கப்பட்டுள்ளது)*

*ஸ்ரீசங்கரர், ஸத்குருவை இவ்வாறு ஸ்துதி செய்ய ஸமாதி நிலையில் இருந்து ஸ்ரீகோவிந்த பகவத்பாதர் கண்களைத் திறந்து பார்க்கிறார். திவ்ய தேஜஸோடு ஒரு பாலகன் தன் எதிரில் நிற்கிறான்.*

*ஸ்ரீசங்கரனைப் பார்த்ததும் ஸ்ரீகோவிந்த பகவத் பாதர் 'குழந்தாய் உன்னைப் பார்க்கும்போது எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. நீ யார்? எங்கிருந்து*

வருகிறாய்? உன் பெயர் என்ன?' என்று கேட்டார்.

இதைக் கேட்ட ஸ்ரீசங்கரர் தன்னைப் பற்றி எதுவும் கூறாமல் அத்வைத தத்துவத்தில் பத்து ஸ்லோகங்களில் தான் யார்? என்பதை குருவிற்கு பதில் அளித்தார். அது தான் 'தசஸ்லோகீ', 'நிர்வாண தஸகம்' என்று அழைக்கப்படும் மிகச் சிறந்த ஸ்லோகங்கள்.

**ஸ்ரீ சங்கரரின் 'தசஸ்லோகீ' (ஆன்ம மஹிமை ஸ்துதி)**

1. *ந பூ⁴மிர் ந தோயம் ந தேஜோ ந வாயுர:*
   *ந க³ம் நேந்த்³ரியம் வா ந தேஷாம் ஸமூஹ: |*
   *அனைகாந்திகத்வாத் ஸுஷுப்த்யேகஸித்³த⁴:*
   *ததே³கோ(அ)வசிஷ்ட: சிவ:கேவலோ(அ)ஹம்||*

**பொருள்**= *நான் என்ற ஆத்மா நிலமல்ல, நீரல்ல, தீயல்ல, வாயு அல்ல, வெளியல்ல, புனலல்ல, அவைகளின் கூட்டமுமல்ல. முடிவற்ற நிலை பெற்றதால் தூக்க நிலையில் மாத்திரம் தெளியப்படுகிறது. எல்லாவற்றையும் நீக்கி எஞ்சி நிற்கும் அந்த கேவல சிவமே நான்.*

2. *ந வர்ணா ந வர்ணாச்ரமாசாரத⁴ர்மா:*
   *ந மே தா⁴ரணாத்²யான யோகா³த³யோபி |*
   *அனாத்மாச்ரயாஹம் மமாத்யாஸஹானாத்:*
   *ததே3கோ(அ)வசிஷ்ட: சிவ:கேவலோ(அ)ஹம்||*

**பொருள்** = *அந்தணன் முதலான ஜாதியல்ல, ப்ரம்மசர்யம் முதலான ஆச்சரமல்ல, ஆசார தர்மமல்ல, தாரணம், தியானம், யோகம் முதலியவையும் அல்ல. ஆத்மா அல்லாத பொய்ப் பொருளைச் சார்ந்து உதிக்கின்ற'நான்' 'எனது' என்ற பொய்க் குழப்பத்தை அழிப்பதால், அனைத்தையும் விலக்கி எஞ்சி நிற்கும் அந்தக் கேவல சிவமே நான்.*

**'தசஸ்லோகீ' தொடரும்.**

## அறுபத்தி மூன்று (63) நாயன்மார்கள்

*அருணன்* *5/63*

### 5. விறன்மிண்ட நாயனார்

கேரள மாநிலம் கொல்லத்திற்கு 30 கி.மீ. தொலைவில் உள்ள 'திருச்செங்குன்று' என்ற ஊரில் அவதரித்தவர் 'விறன்மிண்ட நாயனார்'. இவர் வேளாளர் மரபிலே தோன்றி உழவுத் தொழில் செய்துவந்தார். பற்றுதல் ஏதும் இல்லாத சிவன் தொண்டர். உண்மையான சிவனடியார்களிடம் பேரன்பு கொண்டவர். சிவனடியார்களை வணங்கியபிறகுதான் சிவபெருமானை வணங்கச் செல்லவேண்டும் என்ற கொள்கையைக் கொண்டவர். சிவனடியார்கள் மீது அவ்வளவு பக்தி கொண்டிருந்தார்.

இவர் ஓய்வு நேரங்களில் அருகில் உள்ள சிவாலயங்களை தரிசனம் செய்ய பயணம் மேற்கொள்வதை வழக்கமாக கொண்டிருந்தார். அவ்வாறு திருவாரூர் சென்றார். அந்த ஆலயத்தின் 'தேவாசிரியர்' மண்டபத்தில் சிவனடியார்கள் ஏராளமானோர் கூடி ஆண்டவனின் பெருமைகளை பேசிக் கொண்டிருந்தார்கள். அங்கே சென்ற விறன்மிண்ட நாயனார் அந்த சிவனடியார்களை வணங்கி அவர்களுடன் உரையாடிக்கொண்டிருந்தார்.

அந்த நேரத்தில் கோவிலுக்கு வந்த 'சுந்தரமூர்த்தி நாயனார்' மண்டபத்தில் அமர்ந்திருக்கும் சிவனடியார்களைப் பார்த்தும் அவர்களைத் தொந்தரவு செய்யவேண்டாம் என்று எண்ணி நேராக சன்னதிக்குள் சென்றார்.

அடியார்களை வணங்காமல் கோயிலுக்குள் சென்ற சுந்தரர்மீது கோபம் கொண்ட 'விறன்மிண்ட நாயனார்' அவர் இறைவனை வணங்கிவிட்டு திரும்பும்போது கோபத்தில் இருந்த 'விறன்மிண்ட நாயனார்' அடியார்கள் முன்பு சுந்தரமூர்த்தி நாயனாரைப் பார்த்து 'சிவனடியார்களை வணங்காமல் சென்ற இவரை இன்று முதல் நான் சைவத்திலிருந்து புறம் தள்ளுகிறேன். இவர்

சைவ அடியாரே அல்ல. இவருக்கு அருள் புரிந்த அந்த தியாகராஜ பெருமானையும் நான் புறம் தள்ளுகிறேன்' என்று கோபமாக கூறினார்.

விறன்மிண்ட நாயனாருக்கு ஏற்பட்ட கோபத்தை உணர்ந்த சுந்தரமூர்ததி நாயனார் மிகவும் வருந்தி ஆரூர் பெருமான் முன்பு சென்று 'இந்த அடியார்களுக்கு அடியனாகும் நிலையை எனக்கு அருளவேண்டும்' என்று வேண்டினார். அப்போது இறைவன் அவருக்கு திருத்தொண்டர் தொகை பாட அருள் புரிந்து 'தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என்ற அடியெடுத்துக் கொடுத்தார். அன்று முதல் சுந்தரமூர்த்தி நாயனார் இறைவன் எடுத்துக் கொடுத்த முதல் அடியை வைத்து 'தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்; திரு நீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன்.........விரி பொழில் சூழ் குன்றையார் விறன்மிண்டற்கு அடியேன் ........ ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே' என்று திருத்தொண்டர் தொகைத் திருப்பதிகத்தை தேசமெங்கும் பாடினார்.

இதைக் கேட்ட 'விறன்மிண்ட நாயனார்' சமாதானம் அடைந்தார். இவ்வண்ணம் சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகை பாடுவதற்குக் காரணமாய் அமைந்த 'விறன்மிண்ட நாயனார்' இறைவன் திருவடி நிழலை அடைந்து கணநாதராய் விளங்கும் பேற்றினைப் பெற்றார்.

'விறன்மிண்ட நாயனார்' குரு பூஜை ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதம் திருவாதிரை நட்க்ஷத்திரத்தில் நடக்கிறது.

நாயன்மார்கள் கதை தொடரும்......



# மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்

## வேற்றுமையில் ஒற்றுமை



வர்ண தர்மத்தைப் பார்க்கும் போது எனக்கு ஒன்று ஞாபகம் வருகிறது. முதலில் ஆகாயக் கப்பலில் காற்று பையை ஒன்றாக அமைத்தார்கள். பிறகு, அதில் ஓர் ஓட்டை விழுந்து விட்டால் கூடக் கப்பலே கெட்டு விழுந்து விடுகிறது என்று கண்டு கொண்டார்கள். அதை சிறிது சிறிதாகப் பல காற்றுப் பைகளை வைக்கலானார்கள். தனித்தனியாக இருந்தாலும் எல்லாம் ஒரே இடத்தில் நெருங்கியிருந்து ஒன்றையே தாங்கிக் கொண்டிருந்தன. கப்பல் பழுதடையாமல் இருந்தது. இதுவேதான் நம் மதத்தில் தனித்தனி தர்மம் என்று பிரித்து வைத்திருக்கிற ஏற்பாடு வேற்றுமையில் ஒற்றுமை என்பது இது தான்.

ஏகப்பட்ட சுள்ளிக் கட்டைகளைச் சேர்த்துப் பிடித்து ஒரே கட்டாகக் கட்டுவது என்றால் அது சிரமம் சாத்திமாகாத காரியம். அப்படியே சிரமப்பட்டு ஒரு கட்டாக கட்டினாலும் கூட அது சுலபத்தில் நெகிழ்ந்து கொடுத்துத் தளர்த்திவிடும். முதலில் ஒரு சுள்ளியை ஆட்டி எடுக்கிற மாதிரி நெகிழ்ச்சி ஏற்பட்டுவிட்டாலே போதும். அந்த ஒன்றை எடுத்தால் தளர்ச்சி ஜாஸ்தியாகி இன்னொரு சுள்ளியை சுலபமாக உருவிவிடலாம்; இப்படி இரண்டு மூன்று எடுத்துவிட்டால் அப்புறம் கட்டு ஒரேடியாக தொளதொள என்று தளர்ந்து போய் அத்தனை சுள்ளிகளும் தனித்தனியே விழுந்துவிடும்.

- தொடரும்..

## சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை




## மௌனம் மூலம் கற்பித்தல்

பாஸ்கலி பிரம்மத்தை அறிந்துகொள்ள வேண்டுமென்று விருப்பங்கொண்டான். எனவே, அவன் முற்றுமுணர்ந்த ஞானியான பாத்வ மஹரிஷியை அணுகி, 'பிரபோ! தயவு செய்து பிரம்மத்தைப் பற்றி எனக்குக் கற்றுக் கொடுங்கள்" என்று பிரார்த்தித்தான். பாத்வ மஹரிஷி ஒன்றும் பேசாமல் அமைதியாக இருந்தார். பாஸ்கலி தனது விருப்பத்தை மறுபடியும் அவரிடம் தெரிவித்தான். மீண்டும் மஹரிஷி மௌனமாகவே இருந்தார். பிரம்மத்தை எப்படியாவது தெரிந்து கொண்டுவிட வேண்டும் என்ற பேராவலில் பாஸ்கலி மூன்றாவது முறையாக மஹரிஷியிடம், "தயவு செய்து பிரம்மத்தைப் பற்றி எனக்குக் கற்றுத் தாருங்கள்" என்று கேட்டான். அதற்கு மஹரிஷி, "நான் ஏற்கெனவே உனக்குக் கற்றுக் கொடுத்துவிட்டேன். நீதான் அதைப் புரிந்து கொள்ளவில்லை. மௌனமே ஆத்மா" என்று கூறினார். வேதத்தில் கூறப்பட்டுள்ள இக்கதையை, சங்கர பகவத்பாதர் தமது பிரம்மசூத்திர பாஷ்யத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

பிரம்மா தம் மனதால் சிருஷ்டித்த நான்கு புத்திரர்களான சநகர் மற்றும் சநந்தனர் முதலியவர்கள், இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டு பிரஜைகளை உண்டாக்குவதில் சிறிதளவும் பற்றின்றி விளங்கினார்கள். வைராக்கியத்தின் எல்லையில் இருந்த அவர்கள், பிறப்பிறப்பைக் கொண்ட இந்த சம்சார சக்கரத்திலிருந்து விடுபட்டு, ஆத்மநிலையை அடைந்துவிட பெரிதும் முனைந்தார்கள்.

தொடரும்...

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்
## அத்தியாயம் 3 : வேதங்கள்



*3-7 சென்றமாத தொடர்ச்சி..*

*உதாரணமாக, பொருள்களின் மூலக்கூறுகளின் செயல்பாடுகள் பற்றியதான க்வாண்டம் மெக்கானிக்ஸ் என்ற கோட்பாட்டிற்கு அடித்தளம் அமைத்தவர், எர்வின் ஸ்க்ராடிஞ்சர் என்ற விஞ்ஞானி. அதையொட்டி ஆயிரக்கணக்கான பரிசோதனைகள் நிகழ்த்தப்பட்டு, அவரின் கோட்பாடு ஏற்கப்பட்டு அவருக்கு நோபல் பரிசும் அளிக்கப்பட்டது. ஆனால் 25 ஆண்டுகள் கழித்து, அவரே தன் கோட்பாட்டில் குறைபாடும் முரண்பாடுகளும் கண்டதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். உண்மையில், பார்த்தால், முரண்பாடுகளில்லாத விஞ்ஞானத் துறைகளேயில்லை. கணிதத்தில் கூட மாறுபட்ட கருத்துக்கள் இருப்பதாக கணித வல்லுநர்கள் கூறுகிறார்கள். உதாரணமாக, இயல்பிலா எண்கள் பற்றியதில் கருத்து வேற்றுமைகள் உள்ளன. வேதங்களில் இத்தகைய முரண்பாடுகள் இல்லை. எனவே, அவை பல மனிதர்களால் இயற்றப்பட்டவையாக ஒருபோதும் இருக்க முடியாது.*

*தொடரும்...*

## "தெரிந்து கொள்வோம்"

### 4. ஐந்து பவித்திரமான வஸ்துக்கள் ...தொடர்ச்சி

**உச்சிஷ்டம் சிவ நிர்மால்யம் வமனம் ஸவகர்படம்**
**காகவிஷ்டதே பஞ்சைதே பவித்ராதி மனோஹரா!**

*சென்றமாத தொடர்ச்சி :*

**4. நான்காவது பவித்ரமான வஸ்து = 'ஸவகர்படம்'**

*'ஸவகர்படம்' = சவத்தின் மேல் போர்த்திய போர்வை.*

*ஒரு சவத்தின்மேல் போர்த்திய துணி எப்படி பவித்திரமானதாக ஆகும்?*

*எந்த சவத்தின் மீது போர்த்திய போர்வை? என்று வேதவியாஸர் கூறுகிறார்.*

*அதாவது பட்டுப்புழுக்கள் கட்டிய கூடுகளில் உள்ள போதே அதை எடுத்துக் கொண்டு வந்து கொதிக்கும் தண்ணீரில் போட்டு அதிலிருந்து எடுக்கப்படும் நூலை வைத்து தயாரிக்கப்படுவது பட்டு வஸ்திரம். அதாவது பட்டுபூச்சியை கொதிக்கும் தண்ணீரில் போட்டால் அது செத்துவிடும். அப்போ அது* **'சவம்'**. *அதன்பின் அந்த கூட்டிலிருந்து நூலை எடுத்து பட்டு வஸ்திரம் தயாரிப்பார்கள். பட்டு வஸ்திரம் எப்போதும்* **'மடி'** *யானது. மஹாவிஷ்ணுவிற்கும் பிடித்த பீதாம்பரம். அதேபோல் ஜப தப அனுஷ்டானங்களுக்கு உபயோகப்படும் மான் தோலும் சவத்தின் மேல் போர்த்திய போர்வைதான். எனவே இதை 'உச்சிஷ்டம்' என்கிறார் வேதவியாஸர்.*

**5. ஐந்தாவதான பவித்ரமான வஸ்து = 'காகாவிஷ்டா**

*'காகவிஷ்டா' அதாவது காக்கையின் மலத்திலிருந்து தோன்றும் ஒரு வஸ்து. ஒரு பக்ஷியின் மலம் பவித்திரமாகுமா?*

*காகம் பழங்களைத் தின்று அந்த விதைகள் காகம் மலமாக கழிக்கும்போது நிலத்திலும் கோவில் கோபுர*

*இடுக்குகளில் விழுந்து அவை 'அஸ்வத் செடி'யாக (அரச மரம்) வளர்கிறது. அரச மரம் பகவானின் விபூதிகளில் முக்கியமானது ('விபூதி' என்றால் 'மஹிமை அல்லது பெருமை' என்று பொருள். பகவத் கீதையில் பத்தாவது அத்தியாயத்திற்கு 'விபூதி யோகம்' என்று பெயர்.*

*கீதையின் 10ஆவது அத்தியாயத்தில் 26ஆவது ஸ்லோகத்தில் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் 'அச்வத்த: ஸர்வவ்ருக்ஷாணாம்' = மரங்கள் எல்லாவற்றிலும் நான் அச்வத் (அரசமரம்) மரமாக இருக்கிறேன் என்கிறார்.*

*அஸ்வத்த மரத்திலே மும்மூர்த்திகளின் சொரூபம் இருப்பதாக கூறுவார்கள்.*

*ஸ்ரீமுஷ்ணத்தில் வராக ரூபியான பரமாத்மா அஸ்வத்த மர ரூபத்திலேயே இருக்கிறார்.*

*அதனால்தான் வேதவியாசர் காக்கையின் மலத்திலிருந்து வளர்ந்ததாலும் அஸ்வத்த (அரச) மரத்தை பவித்திரம் என்று கூறுகிறார்.*

*மேற்கண்ட ஐந்து வஸ்துக்களையும் பகவான் வேதவியாஸர் பவித்திரமான வஸ்துக்கள் என்று கூறுகிறார். இவைகளை மேலோட்டமாக பார்த்தால் நமக்கு பொருள் புரியாது. வேதவியாஸர் குஹ்ய (ரகசிய) பாஷையில் கூறியுள்ளார்.*

தொகுப்பு : **செங்கதிரோன்**

*15.02.2023 புதன்கிழமை இரவு 9.30 மணிக்கு ஆன்லைன் வழியாக வேதவகுப்புகள் ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம் நடைபெற்றது. வேத வகுப்புகளில் தற்பொழுது உள்ள சிறுசிறு குறைகள் சரி செய்தல் மற்றும் நேரம் காத்தல், சந்தை சொல்லுதல் குறித்த விஷயங்கள் ஆலோசிக்கப்பட்டது. உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை மிகச் செறிவாக பதிவு செய்தார்கள்.*

# ஔவையார்
# "மூதுரை"

*"**மூதுரை**" = முதுமை + உரை = மூதுரை பழமையான அறக்கருத்துக்களைக் கொண்டிருப்பதால் "**மூதுரை**" என அழைக்கப்படுகிறது. இந்நூலில் மொத்தம் 30 வெண்பாப் பாடல்கள் அமைந்துள்ளன.*

**வெண்பா 7**

**நீரளவே ஆகுமார் நீராம்பல் தான் கற்ற**
**நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு – மேலைத்**
**தவத்தளவே ஆகுமாம் தான் பெற்றசெல்வம்**
**குலத்தளவே ஆகுமாம் குணம்.**

*பொருள் = நீரில் பூத்த ஆம்பல் (அல்லி) பூ நீர் மட்டத்திலேயே இருக்கும் (நீர் உயர்ந்தால் உயரும், நீர் தாழ்ந்தால் தாழும்). அதுபோல ஒருவர் கற்ற அறிவு அவர் கற்ற நூலின் அளவாக இருக்கும். அதுபோல் முந்தைய பிறவியில் எந்த அளவு நற்பணி செய்து தவம்பண்ண பெற்றிருக்கிறார்களோ அந்த அளவு இந்த பிறவியில் செல்வத்தின் அளவு இருக்கும். குணம், பெற்றதாய் தந்தையரைப் பொருத்தே இருக்கும்.*

*விளக்கம் = ஔவையாரின் 'மூதுரை' பாடல்களை படிக்க படிக்க பல நுட்பமான உண்மைகள் தெரியவரும். நீர் ஆம்பல் வளர்ச்சி நீர் மட்டம் வரையில்தான் இருக்கும். நீரின் மட்டம் உயர உயர ஆம்பலும் உயரும். அதுபோல் ஒருவனுடைய நுண்ணறிவும் அவன் படித்த நூல்களைப் பொருத்தே அமையும். நல்ல நல்ல நூல்களைப் படிக்க படிக்க அறிவு பெருகும். ஒரு செடியின் வளர்ச்சி குறித்து தாவரவியல் வல்லுநரால்தான் அறிந்துசொல்ல முடியும். அந்த விதத்தில் ஔவையும் தனக்கு தாவரவியல் அறிவு உள்ளது என்பதை இப்பாடல் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.*

தொகுப்பு : **பரிதி**

*இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்*
**ப்ரம்மஶ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,** *வேளச்சேரி*



# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின் துயர் தீர்க்கும் "இலவச காப்பகம்"



There has never been, nor will there ever be any gift equal to the gift of food..."
(Mahabharat - Anusasana Parva, 13.63.-6)



**V Krishnamoorthy**
Managing Trustee

பிரதி பலன் கருதாது நீ செய்யும் தர்மங்களால் கிடைக்கும் ஆனந்தமே மோக்ஷம். இது இப்பிறவியிலேயே கிடைக்கும். மறு ஜன்மம் வரை தர்மவான்கள் காத்திருக்க வேண்டாம்.

- ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி மஹாபெரியவர்

ஏழை புற்றுநோயாளிகளுக்கு உணவு கொடுத்து அவர்கள் உயிர் வாழ உதவுவதே எங்கள் லட்சியம்... எந்நிலையிலும் இறைவன் அருளால் அதை நிச்சயம் தொடர்வோம்... உங்களது மேலான நிதி உதவியுடன்..!!



அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் காலங்களில், நமது நம்ம தர்ம சாலாவில் தஞ்சம் புகும் ஏழை புற்றுநோயாளிகளை தனது உறவாக எண்ணி இருகரம் நீட்டி அன்புடன் அரவணைத்துக் கொள்கிறது நமது **நம்ம தர்மசாலா**. நம்ம தர்மசாலாவில் ஏழை புற்றுநோயாளிகளுக்கும், அவர்களது ஒரு உதவியாளருக்கும் மூன்று வேளை உணவு; தங்குமிடம் ஆகியவை ஏழை புற்று நோயாளிகளின் சிகிச்சை காலம் முழுவதும் **முற்றிலும் இலவசமாக** வழங்கப்படுகிறது. இதன் மூலம் அவர்கள் முறையான சிகிச்சையை, தடையின்றி பெற்று விரைவில் இந்நோயிலிருந்து விடுபடுகிறார்கள். **ஏழை புற்றுநோயாளிகள் பசியாற உதவிடுங்கள். உண்மையான இன்பம் இதுவே என்று உணர்ந்திடுங்கள்.**

## Progress of construction work at our free old age home site as on 20.2.2023


ROUTINE INSPECTION OF THE MANAGING TRUSTEE

2024 தை மாதம் முதல் ஆதரவற்ற முதியவர்கள் பயன் பெறும் வகையில் செங்கல்பட்டு அருகே மாமண்டூர் கிராமத்தில் (சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில்) அமைய உள்ள **ஸ்ரீ ஜயேந்த்ர பெரியவா நினைவு இலவச முதியோர் இல்ல** கட்டிட பணிகள் சிறப்புடன் நடைபெற்று வருகிறது. **முற்றிலும் இலவசமாக** செயல்பட உள்ள இந்த முதியோர் இல்ல கட்டிடப் பணிகளுக்கு ரூ.5,00,000/- வழங்கும் நன்கொடையாளர்கள் விரும்பும் பெயரில் ஆதரவற்ற முதியோர் தங்கும் அறை ஒன்று அமைக்கப்படும். தாங்கள் விரும்பிய தொகை வழங்குபவர்களின் பெயர்களும் தகுந்த முறையில் பதிவு செய்யப்படும்.


INSPECTION OF SHRI PRAKASHJI, PROJECT INCHARGE







**தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்**

- ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம்
- ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம்
- ரூ.25,000/- நிதியளித்து "நம்ம தர்மசாலா"வின் ஒரு நாள் செலவினை ஏற்கலாம்
- ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

Kindly send your contribution by CHEQUE / NEFT / CASH / M.O.

Account Name: SRI MATHA TRUST Bank : INDIAN OVERSEAS BANK
Branch: Gandhi Nagar, Chennai-20 Current A/c No.:163502000001090
IFSC: IOBA0001635

வெளிநாட்டு வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் தங்களது நன்கொடையை கீழ்காணும் எங்களது FCRA A/c-க்கு அனுப்பலாம்
NAME : SRI MATHA TRUST S.B. A/C No. : 40384754521
BANK : STATE BANK OF INDIA BRANCH : NEW DELHI MAIN BRANCH
IFSC : SBIN0000691 SWIFT : SBININBB104

| Donations to our Trust is exempted U/S.80(G) of the Income Tax Act. | Sri Matha Trust PAN No. **AACTS9747G** | நன்கொடை வழங்கும் அன்பர்கள் தங்களது விலாசம் மற்றும் "PAN" நம்பரை எங்களுக்கு அனுப்பவும். |
|---|---|---|

Admin Office: 95/42, Flat No.3, Ground Floor, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, [next to Harini Skin & Laser Clinic] Chennai-20. Tel: 044 - 24420727, 42661687

Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113. Tel: 044 - 4509 8647

9500001065 / 9003247857 vkrishnamoorthy.smt@gmail.com www.srimathatrust.org


Rs.1000 inclusive of tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Contact
9952972436 / 7824807801
Shri Meera Labs Pvt Ltd
WOPPER

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 3 பகுதி - 27

*பலர் ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் பல்வேறு அறிவுரை தந்திருக்கின்றார்கள்.*

**“பணிவுடையன் இன்செயல னாதல் ஒருவர்க்கு**
**அணியல்ல மற்றும் பிற.”**

*(அதிகாரம்-10 குறள்-95)*

*பணிவாக இருப்பவன், இனிய சொற்களே பேசுகிறவன் என்று தான் மனிதனுக்கு அழகு. அதுமட்டுமல்ல, இவ்வகையில் வாழ்பவனுக்கு பல்வேறு நன்மைகளும் உண்டு.*

*“பெற்றோர்கள் குழந்தைகள் மீது மேலான தாக்கத்தை, ஏற்படுத்துவது தங்களை விட ஆசிரியர்களால தான் இயலும் என்று எண்ணுகிறார்கள்.*

*எந்த ஒரு தேசத்தையும் நாம் தகுதி வாய்ந்ததாக உருவாக்க வேண்டுமென்றால், உயரிய திறன் பொருந்தியவர்கள் பள்ளி ஆசிரியப் பணிக்கு செல்ல வேண்டும்” என்று ஈஷா மையத்தின் சத்குரு கூறியுள்ளார்.*

*மிகச் சிறந்த பேச்சாளரும், கலைமகள் பத்திரிகையில் பல ஆண்டு காலமாக ஆசிரியரும், மிகச் சிறந்த எழுத்தாளருமான திரு. கி. வா. ஜகன்நாதன், “நற்குணங்கள் கொண்ட நல்ல மனிதராகவும், பெருந்தன்மை உடையவராகவும் ஆசிரியர் இருக்க வேண்டும். பூமி தேவியைப் போன்று பொறுமையுடன் இருக்க வேண்டும்.*

*ஆசிரியர் ஒரு தொழிலாளியல்ல. அவர் கல்விச் செல்வத்தை வாரி வழங்கும் வள்ளல், மாணவர்கள்*

கொடையைப் பெறுபவர்கள்.

பாராட்டுதலுக்குரிய நம் முன்னோர்கள் வகுத்துக் கொடுத்த லட்சணங்கள் உடையவர்களாக நம் நாட்டு ஆசிரியர்கள் திகழ வேண்டும்" என்று மிகச் சிறப்பாக குறிப்பிடுகிறார்.

ஸ்ரீமத் ஸ்வாமி ரங்கநாதானந்தா, "உபநிஷத் என்றாலே 'ஆசானருகில் அமர்ந்து கற்றல்' என்று பொருள்" என்கிறார்.

"வெளிநாடுகளிலுள்ள இந்திய மாணவர்களும், தூதரகப் பணியாளர்களும், தம் தாய்நாட்டைப் பற்றியோ, அதன் கலாசாரத்தைப் பற்றியோ ஏதும் தெரிந்து கொள்ளாமலே இருக்கின்றார்கள். தனது சொந்த கலாசாரப் பொக்கிஷத்தை உணர்ந்து ஏற்றுக் கொள்ளும் சக்தியில்லாமல் போனால், மேலை நாட்டு கலாசாரத்தை நாம் ஏற்க நினையும் பொழுது, நமக்கு கிடைப்பது அந்த கலாசாரத்தின் மலிவான உபயோகமற்றபகுதியே அன்றி அதன் பின்னே உள்ள வலிமையல்ல. அந்த சக்தியை நாம் உணர வேண்டுமென்றால் அதற்கு அடிப்படையாக அமைவது நமது கல்வியே" என்று பல விவரங்களை ஸ்வாமி கூறுகிறார்.

அன்று ஆசிரியரானால் மதிப்பும், மரியாதையும் கிடைத்தது. இன்று பல வெளிநாட்டு நிறுவனங்கள், இந்திய நிறுவனங்கள் அளிக்கும் பணிகள் ஏராளம். எதுவும் கிடைக்கவில்லையென்றால், இருக்கவே இருக்கிறது ஆசிரியப் பணி என்று தாம் படித்த கல்லூரியிலேயே பேராசிரியராவது வழக்கமாகிவிட்டது.

பல சினிமாக்கள் பள்ளி அல்லது கல்லூரி ஆசிரியர்களை கேலிச் சித்திரமாக்குவதை நாம் காண்கிறோம்.

பல விளம்பரங்களில் குறிப்பாக 'சாக்லேட்'

விளம்பரங்கள் ஒரு பள்ளியின் முதல்வரை, கைகளில் புத்தகத்தோடு நிற்கும் ஒரு அப்பாவி மாணவியின் முன்பு, திரையில் தெரியும் சாக்லேட்டுகளை நக்குவதுப் போன்றும், அதை தலைமையாசிரியர் பார்த்துவிட்டு பயந்தோடி அலமாரியின் கதவைத் திறந்தால் உள்ளே அதே முதல்வர் திருட்டுத்தனமாக கைநிறைய சாக்லேட்டுகளை உண்பது போன்றகாட்சி.

கற்பனைக்கு வரம்பில்லையா? இதைவிட ஆசிரியப் பெருமக்களை அவமானப்படுத்த இயலுமா?

அவர்களும் உங்களில் ஒருவர், மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரியவர்கள் என்பதை பெற்றோரை உணர வைப்பது தான் இத்தொடரின் முக்கிய அம்சமாகும்.

தொடரும்...

## திருமண வாழ்த்து

வேதபாரதி வேத வகுப்பு பண்டிட் குரு ஸ்ரீமான்
**வெங்கடேஷ் கனபாடிகள் - சௌ.வைஷாலி**
சுபமுகூர்த்தம் **01.03.2023 புதன்கிழமை,**
சென்னை, குரோம்பேட்டை,
**ஸ்ரீ பத்மாராம் கணேஷ் மண்டபத்தில்**
**ஆச்சாரியாள் அனுக்ரஹத்துடன்**
சிறப்பாக நடைபெற வேதபாரதி மனதார
ப்ரார்த்தனை செய்கிறது.

---

வேதபாரதியின் அணுக்கத்தொண்டர்,
அன்புக்கு பாத்திரமான தாம்பரம்
**சிர.எம்.பாலசுப்பிரமணியம் - சௌ. வி.பத்மா**
திருமணம் **03.03.2023, வெள்ளிக்கிழமை**
அன்று குரோம்பேட்டை
**மஹாலட்சுமி மஹாலில்** சிறப்பாக நடைபெற
வேதபாரதி மனதார ப்ரார்த்தனை செய்கிறது.

# சாதனைப் பறவைகள்

டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்

## சிவயோகினிலல்லேஸ்வரி - 3



தன் சிறு புன்னைகையால், மௌனத்தால், தன் வாக்கினால் ஆத்ம ஞான விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொண்டிருந்த சிவயோகினி லல்லேஸ்வரியை இஸ்லாமியர்கள், 'லாலா அரிஃபா' என்றழைத்தார்கள். அவருடைய வாக்குகள் அனைத்து மதங்களுக்குமாக இருந்ததே இதற்குக் காரணமாக இருக்கலாம். லல்லேஸ்வரி தன் அந்தராத்மாவில் உணர்வதை தன் வாக்கினில் கவிதைகளாக முணுமுணுக்க ஆரம்பித்தார். யாரெல்லாம் அதனைக் கேட்டு ஆனந்தம் அடைந்தார்களோ அவர்கள் லல்லேஸ்வரியின் பரம பக்தர்கள் ஆனார்கள்.

'லல்லா வாக்' என்ற தலைப்பில் அவர் வாய்வழி வந்துதிர்த்த வாக்குகள் (லல்லாவின் வார்த்தைகள்) புத்தகங்களாக வெளியிடப்பட்டு இன்று வரை இந்து-முஸ்லிம் இருசாரார்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டும், பாடப் பட்டும் வருகிறது என்கிறார்கள். அவரது வாக்குகள், மதங்களையும் காலங்களையும் கடந்து பயணப்பட்டுக் கொண்டே இருப்பது அதன் மகிமையை பறைசாற்றுவதாக உள்ளது. அவற்றில் மதபேதங்கள் இல்லை, பாலின பேதங்கள் இல்லை, உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்று பேதமில்லை அனைவருக்குமான ஒரே சத்திய வாக்குகளாக அமைந்திருந்ததுதான் லல்லேஸ்வரியின்

வாக் விசேஷம். விடுகதைகள் போல் வார்த்தைகள் வெளிவந்தன. இவரை யாரும் பெண் என்று பார்க்கவில்லை. 'ஞானஸ்வரூபி' யாகவே பார்த்தார்கள். இவருக்கு ஒரே சித்தாந்தம். "வெளியே ஒன்றுமில்லை. அனைத்தும் அவரவர் உள்ளேயே இருக்கிறது" என்பதுதான். சிவயோகினியான லல்லேஸ்வரி தனக்குள்ளே தானே பயணப்படும் 'அந்தர்முகி' யானார். இவருடைய வாழ்க்கைக்கும் சித்தியடைந்த விதத்திற்கும் ஆதார பூர்வமான தகவல்கள் இல்லை என்பது சிலரது கருத்தாக இருந்தாலும், சிவயோகினி லல்லேஷ்வரியைப் பற்றி ஏராளமான புத்தகங்களும், கட்டுரைகளும் எழுதப்பட்டுள்ளன.

பேராசிரியர் எம்.எல்.கௌல் என்பவர் இவரது சித்தி பற்றி கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்:

"வாழ்க்கையின் இறுதிக் காலகட்டத்தில், லல்லேஷ்வரி ஆனந்த்நாக் மாவட்டத்தில் 'பிஜ் பிஹரா' என்ற சிற்றூரை அடைந்தபோது, அவருடைய தேகத்திலிருந்து ஜோதி ஸ்வரூபமாக இறைவனுடன் கலந்ததாக அறியப்படுகிறது. இவருடைய உடலுக்கு இரண்டு மதத்தினரும் சொந்தம் கொண்டாடுவதை உணர்ந்த இவரது ஆத்மா, அசரீரியாக, கூடியிருந்தவர்களிடம் இரண்டு மண்பாண்டங்களைக் கொண்டுவந்து, ஒன்றில் தன் உடலை அமரவைத்து, மற்றொரு பாத்திரத்தைத் தன் சிரசின் மீது கவிழ்க்கச் சொன்னது.அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே உடல் சுருங்கி, இரண்டு பாண்டங்களும் ஒன்றின் மீது ஒன்றாக பொருந்திக் கொண்டன. சிறிது நேரத்திற்குப் பிறகு, மேல் பாண்டத்தை எடுத்துப் பார்த்தபோது, அடிப் பாத்திரத்தில் நீர் போன்ற ஒரு

திரவம் மட்டுமே நிரம்பி இருந்தது கண்டு அதிர்ச்சியடைந்தனர் மக்கள். அந்த திரவத்தை இரு மதத்தினரும் சரி பாதியாக பிரித்து எடுத்துச் சென்று, அவரவர் மத வழக்கப்படி சடங்குகள் செய்தனர்.” என்று குறிப்பிடுகிறார்.

ஆன்மீகச் சிந்தனை உள்ள எவரும் சிவயோகினியை விமர்சனம் செய்ய மாட்டார்கள். பாரத தேசத்தில் பக்தி இயக்கத்திற்கு மிக முக்கிய காரணர்களாக இருந்த குருநானக், கபீர், மீராபாய், ரைதாஸ், துளசிதாஸ் போன்றவர்களின் பட்டியலில் இடம்பெறத் தகுந்தவர் காஷ்மீரத்து சிவயோகினி லல்லேஷ்வரி என்கிறார். மேலும் சில ஆராய்ச்சியாளர்கள், சிவயோகினியை பாரத தேசத்தின் பக்தி இயக்கத்தின் முன்னோடி என்று கருதுகிறார்கள். பக்தி யோகத்தை மிகவும் தீவிரமாகக் கடைபிடித்தவர் லல்லா. அத்தகைய ஒரு சிவயோகினியை வணங்கி, மேலும் பல சாதனைப் பறவைகளை சந்திப்போம்.

முற்றும்.

## சிவராத்திரி பெருவிழா - 18.02.2023

வேதபாரதி சார்பில் சிவராத்திரி பெருவிழா காணொலி மூலம் நடைபெற்றது. குருஜி ஸ்ரீமான் கைலாச கனபாடிகள் தலைமையில் 80க்கும் மேற்பட்ட வித்யார்த்திகள் கலந்து கொண்டு 3 வேதங்களையும் பாராயணம் செய்தார்கள். மதுரை ஸ்ரீ முரளிதரன், ஸ்ரீமதி. நீலா முரளிதரன் இல்லத்தில் சிவராத்திரி சிறப்பு அபிஷேக ஆராதனைகள் அதே நேரத்தில் சிறப்பாக நடைபெற்றது. இறுதியில் ஸ்வாமிக்கு நெய்வேதனமும், குருஜியின் ஆசிர்வாத வசனத்துடன் சிவராத்திரி நிறைவு பெற்றது.

# ஷண்மத கோட்பாடு

**திருச்சி கணேசன்**

எத்தனையோ மஹான்கள், ஞானிகள் மற்றும் ஆசார சீலர்கள் இஷ்ட தெய்வம் என்று ஏதாவது ஒரு தெய்வத்தை ஸ்தோத்தரித்து அதனுடைய உபாஸனையைப் பரப்பியிருப்பார்கள். ஆனால் நம் ஆதிசங்கரர் தான் அத்தனை தெய்வங்களையும் ஸ்தோத்தரித்து அத்தனை தெய்வவழிபாட்டுக்கும் "ப்ரபஞ்ச ஸாரதந்திரம்" என்ற நூலில் வழி முறைகளை விளக்கினார். அந்த ஞானிதான், இப்படி பக்திக்கும் புதுவித எழுச்சியைத்தந்தவர். குறிப்பாக ஈஸ்வரன், அம்பாள், விஷ்ணு, ஸுர்யன், விக்நேச்வரர், ஸுப்ரமண்யர் என்றஆறு தெய்வங்களின் வழிபாட்டைப்ரகாசப்படுத்தி நிலைநிறுத்தி "ஷன்மதஸ்தாபனாச்சார்யாள்" என்று பெயரையும் பெற்றார்.

மக்கள் தெய்வபேதம் பாராமல் ஸமரஸபாவனை பெற்றவர்களாக இருக்க வேண்டுமென்று நினைத்தார். இதன் காரணமாக ஈஸ்வரன், அம்பாள், விஷ்ணு, விக்நேசுவரர், ஸுர்யன் ஆகிய ஐந்து ஸ்வாமிகளையுமே "பஞ்சாயதனம்" என்பதாக வைத்து அனைவரும் பூஜிக்க வேண்டுமெனறு விதித்தார். "மார்க்கண்டேய ஸம்ஸதை" என்றநூலில் இந்த விஷயம் தெளிவாகச் சொல்லப் பட்டிருக்கிறது.

இந்த ஐந்தில் எந்த ஒரு ஸ்வாமி அவர்களின் இஷ்டதெய்வமோ, அதனை நடுவில் வைத்து மற்றநான்கையும் நான்கு மூலைகளில் வைத்து ஐந்தையும் ஆராதித்து வழிபடவேண்டும். இதில் எந்த தெய்வம் நடுவில் இருந்தால் மற்ற நான்கும் எந்த எந்த மூலையில் இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு விதிமுறை உண்டு, அதன்படி வைத்து முறையாக வழிபட வேண்டும்.

இந்த ஸ்வாமிக்கும் கண், காது, மூக்கு வைத்து நாம் பிம்பம் அமைக்க வேண்டும் என்று இல்லாமல் இயற்கையில் கிடைக்கும் ஐந்து வகை கற்களை வைத்து விசேஷ மூர்த்தியாக வழிபடச் சொல்கிறார்.

1. விஷ்ணு மூர்த்தம் - ஸாளக்ராமம் – நேபாளம் கண்டகி நதியில் கிடைப்பது.
2. அம்பாள் மூர்த்தம் - ஸவர்ண ரேகாசிலா – தங்க ரேக் ஓடும் கல் – தெலுங்குதேச ஸவர்ணமுகி ஆற்றில் கிடைப்பது.
3. பிள்ளையார் மூர்த்தம் – சோண பத்ரம் என்ற சிகப்புக்கல் – துங்கபத்ரா நதியில் பாட்னாவுக்கு 20 மைல் மேற்கே கிடைப்பது.
4. ஸுர்ய மூர்த்தம் – ஸ்படிகம் – தஞ்சாவூர் அருகில் வல்லத்தில் யாரும் வெட்டாமல் இயற்கையாக அமைந்துள்ள ஏரியில் இந்த ஸ்படிகம் கிடைப்பது.
5. ஈஸ்வர மூர்த்தம் – பாணம் – நர்மதையில் தேச மத்தியில் ஹிருதய ஸ்தானத்தில் கிடைக்கிறது.

இதனுடன் ஒரு சிறிய வேலையும் வைத்து சுப்ரமணியராக ஆக்கி ஷண்மதம் ஆக்கி ஆறு தெய்வங்களையும் வழிபடச் செய்தார். ஆரம்பத்தில் ஒரு பற்றுக்கோல் வேண்டும் என்பதற்காக சூரிய வழிபாட்டின் மூலம் ஈஸ்வர பக்தி, ஈஸ்வர த்யானம் ஈஸ்வர உபாசனை ஊட்டினார். பிறகு செடி நன்கு வளர்ந்த பின் பந்தல் / பற்றுக்கோல் தேவை இல்லை என்பது போல் ஒரு உயர்ந்த நிலையை பக்தி மார்க்கத்தில் அடைந்த பிறகு உருவ வழிபாடு தேவை இல்லை. உருவத்தை வழிபட்டு அதன் தத்துவத்தை நம் மயமாக்கிவிட வேண்டும் என்றார்.

முற்றும்.

# மதுவந்தி

'கிளிங், கிளிங்' என ஒலிக்கும் கண்ணாடி உபகரணங்களின் சத்தம், ஆங்காங்கே வினோத கருவிகளிலிருந்து கூக்குரலிடும் அலாரங்கள், குறுக்கும் நெடுக்குமாக வெள்ளை கோட் அணிந்த மிகச்சில மனிதர்களின் துரித நடை. இவ்வாறே எப்பொழுதும் காட்சியளிக்கும் அரசு உயிரியல் தொழில்நுட்ப ஆய்வறை. இந்த அறையைப் போலவே இதே கட்டிடத்தில் வேறு வேறு வகையான ஆராய்ச்சிகள் நடக்கும் ஆறு அறைகள் உள்ளன. அந்தக் கட்டிடத்தைச் சுற்றி பச்சை பசேலென்ற மரங்களும், செடி கொடிகளும் நகரத்தில் இந்த இடம் இருப்பதை மறக்கச் செய்யும். அறிவியலை மட்டுமே நோக்கிப் பயணிக்கும் மனிதர்களைக் கொண்ட பேரமைதி உலவும் கூடாரம் அது.

இந்தக் கூடாரத்தில் இப்பொழுது விஜியும் முழு நேர pHD மாணவியாக இணைந்தாள். சிறு வயது முதல் விஜி கண்ட கனவு தன்னுடன் படித்த இளங்கலை மாணவர்கள் வெவ்வேறு பாதையை தேர்ந்தெடுத்து சென்றிருந்தாலும், தான் இதைத்தான் செய்ய வேண்டும் என கங்கணம் கட்டிக்கொண்டு வந்து சேர்ந்த இடம்.

முதல் நாள் முதலே தன்னுடைய சீனியர் கூறும் முறைகளைக் கவனித்து அதன்படி செய்வதே விஜியின் பணி. ஓரிரெண்டு வாரங்களில் இந்தப் பாதை எங்கும் செல்லும் என விளங்க ஆரம்பித்தது. Petridish, agar-agar, beaker, test tube, autoclave, incubator என மனிதர்களின் வாசம் மறந்து பாக்டீரியா உடனும், fungi உடனும் பேச ஆரம்பித்திருந்தாள். குறைந்த stipend, பல மணி நேரங்கள் கால் கடுக்க வேலை, அர்த்த ராத்திரியிலும்,

விடியற்காலையில் கூட சில நாள் பணி செய்ய வேண்டிய நிர்பந்தம். கல்லூரி வாழ்க்கைக்கு துளி கூட சம்பந்தம் இல்லாத இடமாக இருந்தாலும், அவள் கண்ட கனவு மட்டுமே அவளை நகர்த்திச் சென்றது.

இவ்வாறே எட்டு மாதங்கள் கழிந்தன. நண்பர்கள் என கூறிக் கொள்ளும்படி யாரும் அமையவில்லை. சுற்றிலும் வெவ்வேறு வயது நிலையில் இருக்கும் மனிதர்களைக் கண்டு அவ்வப்போது புன்முறுவலிட்டாலும், ஏதோ ஒரு இறுக்கம் அந்த இடத்தில் இருப்பதை உணர்ந்தாள். எதையும் பொருட்படுத்தாமல் ஒரு ஞானியைப் போல உழன்று கொண்டிருந்தாள். அந்த சமயத்தில், கோடை விடுமுறையில் இன்டெர்ன்ஷிப் செய்வதற்காக சில மாணவர்கள் சேர்ந்திருந்தார்கள். மதுவந்தி என்கிற மாணவியை விஜியுடன் பணி செய்யும்படி முடிவு செய்திருந்தார்கள். ஆய்வு பணி என்பது பலமுறை ஒரே மாதிரியான சோதனையை திரும்ப திரும்ப சில சில மாறுதல்களுடன் செய்ய வேண்டி இருக்கும். விஜி தன் ஆய்வின் ஒரு பகுதியை எடுத்து அதை மதுவிற்கு விவரிக்க முயற்சி செய்தாள்.

மது, கல்லூரி படிப்பின் நான்காம் வருடத்தில் இருந்தாலும் காண்பதற்கு பள்ளி மாணவியைப் போல இருந்தாள். சின்ன உருவம், கீச், கீச்சென்ற குரல், துறு துறுவென அந்த இடத்திற்கும் மதுவின் நடவடிக்கைகளுக்கும் துளியும் சம்பந்தம் இருக்காது. தான் வந்து சேர்ந்த இரண்டு நாட்களிலேயே எல்லோருக்கும் அவள் முகம் மிக பரிச்சயமானது.

“ஹலோ குட் மார்னிங், உங்களை மேடம்னு கூப்பிடணுமா இல்லை அக்கானு கூப்பிடணுமான்னு” விஜியை நோக்கி மது கேட்டாள். தொடரும்...

**வெ.சிவசங்கரி**

## புதுச்சேரி நிகழ்வுகள்

*14.02.2023 செவ்வாய்கிழமை அன்று மாலை அனுஷ பூஜை, ஸகஸ்ர நாம பாராயணத்துடன் இராதா கல்யாண கமிட்டியின் நிறைவு விழாவும், நவராத்திரி கொலுப்போட்டி பரிசளிப்பு விழாவும், பாண்டிச்சேரி அனுஷம் மஹாலில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. திரளான அன்பர்கள் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை பதிவு செய்தார்கள். எல்லோருக்கும் உணவு ஏற்பாடு செய்யப்பட்டது.*

*பிரதிவாரம் ஞாயிற்றுக்கிழமைகளில் வேதபாரதி பாண்டிச்சேரி மேட்ரிமோனியல் சேவை 135, ஈஸ்வரன் கோவில் தெருவில் நடைபெற்று வருகிறது.*

*18.02.2023 சனிக்கிழமை மஹா சிவராத்திரியை முன்னிட்டு புதுச்சேரி, வேதபாரதி சார்பில் ஸ்ரீ வேதபுரீஸ்வர் திருக்கோவிலில் நான்கு கால சிறப்பு பூஜைகளிலும் கைங்கரியம் செய்யும் பணி மிகச்சிறப்பாக நடைபெற்றது.*

*20.02.2023 திங்கட்கிழமை காலை பாண்டிச்சேரி, விவேகானந்தா பள்ளியில் ஔவை விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. 280 குழந்தைகள் பங்கு பெற்று குழந்தைகளுக்கு பரிசளிப்பும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.* **ஆசிரியர்.**

### வாழ்த்துகிறோம்

*சென்னை, மறைமலை நகரில் திருப்பாவை விழா ஸ்ரீ க்ருஷ்ண ஜெகந்நாதன் ஜி தலைமையில் 12.02.2023 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. 150 க்கும் மேற்பட்ட குழந்தைகள் கலந்து கொண்டு திருப்பாவை, திருவெம்பாவை ஒப்பித்தல் மற்றும் பரிசளிப்பு விழாவும் நடைபெற்றது. எல்லோருக்கும் ப்ரசாத ஏற்பாடு செய்திருந்தார்கள். விழா சிறப்புற நடைபெற மறைமலை நகர் பொறுப்பாளர் ஸ்ரீமான் ப்ரகாஷ் அவர்களும், இந்துசமய மன்றமும் ஏற்பாடு செய்தார்கள்.*

## “வேதபாரதி”யின் வளர்ச்சி
## பகுதி - 3

*2008 ஆம் ஆண்டு திருப்பூரில் நிகழ்ந்த மிக மிக முக்கியமான இரண்டாவது நிகழ்வு :*

*திருப்பூர் டாக்டர் ஸ்ரீ கே.நடராஜன் அவர்கள் தலைமையில் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம மண்டலி, பூஜ்ய ஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகளின் வழிகாட்டுதலில் திருப்பூர் மக்களின் நல்வாழ்விற்காக வாரம்தோறும் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணமும், ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பயிற்சி வகுப்புகளும் நடத்தி வந்தது. வருடா வருடம் பல ஜபயக்ஞங்களையும் நடத்தி வந்தது.*

*பூஜ்ய ஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள் உலக நன்மைக்காக காயத்ரீ ஜபம் செய்யத்தக்க பிரஹ்மசாரிகளைத் தேர்ந்தெடுக்கத் தமிழ்நாடு முழுவதும் பயணித்துள்ளார். ஸ்வாமிகளுக்கு “காயத்ரீ” ஸ்வாமிகள் என்றும் ஒரு பெயர் இருந்தது. ஸ்வாமிஜி அவர்கள் ஸனாதன தர்மத்திற்காக தேசம் முழுவதும் பயணம் செய்து அரும்பணி ஆற்றி உள்ளார்கள். இதற்காக அவர் பல ஸத்சங்கங்களை உருவாக்கியுள்ளார்கள்.*

*திருப்பூர் ஆடிட்டர் ஸ்ரீ T.R. ராமநாதன், திருப்பூர் மின்சார வாரியத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த ஸ்ரீ R.வெங்கட்ராமன் மற்றும் ஸ்ரீ கிருஷ்ண ஜகன்னாதன் ஆகியோரின் தீவிர ஆலோசனையின்படி ஸ்வாமிஜி அவர்களின் ஆசியோடு ஒரு அமைப்பை (ஸத்சங்கம்) ஆரம்பித்து அதன் மூலம் தமிழ்நாடு முழுவதும் ப்ரம்மசாரி சிறுவர்களுக்கு ஸந்த்யாவந்தன பயிலரங்கங்களையும், இளம் பெண்களுக்கு யுவஸ்ரீ வாழ்வியல் பயிலரங்கங்களையும், நடத்த வேண்டும் மேலும் தன்னலம் கருதாமல் பல சேவைகளைச் செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. அதன்படி*

ஸ்வாமிஜியின் ஆசியோடு 2008ல் ஒரு அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. அந்த அமைப்பிற்கு “வேதபாரதி” என்று பெயர் சூட்டியவர் ஸ்ரீ கிருஷ்ணஜகந்நாதன் ஜி அவர்கள்

“வாழ்வதற்குப் பொருள் வேண்டும்
வாழ்வதிலும் பொருள் வேண்டும்”

இதுதான் வேதபாரதியின் மந்திரம், நோக்கம்

அமைப்பு ஆரம்பித்தது முதல் ஆடிட்டர் ஸ்ரீ T.R. ராமநாதன் அவர்கள் இந்த அமைப்பின் ஸ்தாபகராக இருந்து, அவ்வப்போது அறிவுரைகள் கூறி வழி நடத்தி வருகிறார்.

**“வேதபாரதி” அமைப்பு ஆரம்பித்து நடத்திய முதல் நிகழ்ச்சி :**

2008 ஆம் ஆண்டு மே மாதம் திருப்பூர் 12 -R திருமண மண்டபத்தில் நடந்த “சந்த்யாவந்தன பயிலரங்கம்”. பயிலரங்கத்திற்கு தலைமை ஏற்று நடத்திக்கொடுத்தவர் தேனீ தவத்திரு ஓங்காரநந்தா ஸ்வாமிகள். நிகழ்ச்சியில் ஸ்ரீ கிருஷ்ண ஜகந்நாதன்ஜி அவர்கள் ஆன்மீக சொற்பொழிவாற்றினார்.

**தொகுப்பு : பகலோன்.**

17.02.2023 வெள்ளிக்கிழமை இரவு 9.00 மணிக்கு Zoom மூலமாக பெண்மையைப் போற்றுவோம் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

7,8,9 ம் வகுப்பு குழந்தைகளுக்கான பாடத்திட்டம் தயாரிப்பது குறித்து ஆலோசனைகள் நடத்தப்பட்டது. வரும் கல்வியாண்டில் பள்ளிகளுக்குச் சென்று யுவஸ்ரீ நடத்திட நடவடிக்கை எடுக்க ஆலோசிக்கப்பட்டது.

பிரதி மாதம் ஆன்லைன் வழியாகவும் யுவஸ்ரீ நடத்திட ஒத்த கருத்துள்ள ஆர்வலர்களை மேலும் ஒருங்கிணைப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

## கோடி காயத்ரி ஜபம் ஹோமம் திருச்சி 2022

சென்றமாத தொடர்ச்சி...

மேலும் தர்மபுரி, பெங்களூர் போன்ற நகரங்களிலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. கோடி காயத்திரீ ஜபம் ஹோமம் - திருச்சியில் நடத்துவதற்கான ஆரம்பக் கூட்டம் ஆகஸ்டு 28 அன்று சியாமளா மாமி என்ற கிரகஸ்தரின் கிரஹத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேதபாரதியின் செயலாளர் திரு.வெங்கட்ராமன் அவர்கள் கலந்து கொண்டு கோடி காயத்ரீ ஜப யக்ஞத்தின் ஏற்பாடுகள் குறித்த ஆலோசனைகளை வழங்கினார். இக்கூட்டத்திற்குப்பிறகு இந்த யக்ஞத்தில் கலந்து கொள்பவர்களின் பதிவு துவங்கியது. இப்பதிவில் ஆரம்பத்தில் திரு.ஜே.சந்திரசேகர், ஜெயராமன் பிறகு ஆங்கரை சிவராமகிருஷ்ணன், போட்டோகிராபர், மணிகண்டன், எல்.ஐ.சி. நந்தகுமார் மற்றும் அகிலாண்டேஸ்வரி, வித்யாலயா வெங்கடேசன் ஆகியோரின் அயராத முயற்சியால் சுமார் 170 கிரகஸ்தர்கள், பிரம்மசாரிகள் பதிவு செய்தனர். நவம்பர் 6 அன்று நடைபெற்ற ஜபம் மற்றும் பதிவு செய்தவர்களின் ஆலோசனைக் கூட்டம் பேங்க் காலனி கற்பக விநாயகர் கோவிலில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் வேதபாரதியின் பொறுப்பாளர் திரு. ரகுநாத் அவர்கள் கலந்து கொண்டார். இதற்கு முன்னர் அக்டோபர் 16 அன்று யோகா திருமண மண்டபத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பெருவாரியான உறுப்பினர்கள் கலந்து கொண்ட ஆலோசனைகளை வழங்கினார்கள்.

இதற்கிடையில் இந்த யக்ஞத்தை சிறப்பாக நடத்துவதற்கு உண்டான ஏற்பாடுகள் சிறப்பாக நடைபெற்று வந்தன. இந்த யக்ஞத்தை நடத்துவதற்கு அகிலாண்டேஸ்வரி வித்யாலயா பள்ளி நிர்வாகம் ஆரம்பம் முதல் தங்களது முழுமையான ஒத்துழைப்பை நல்கியது குறிப்பிடத்தக்கது.

தொடரும்.....


உ
திருமண பொருத்தம் இலவசம்
(அனைத்து சமூகத்தினருக்கும்)
வாட்ஸ்அப் மூலம் மட்டும்
பையன்கள் பெண்கள் ஜாதக நகல்களை
வாட்ஸ் அப்பில் அனுப்புதல் வேண்டும்.
Brahmin Kalyanam.com
An Auspicious Beginning ...
EXCLUSIVE PORTAL FOR BRAHMINS
BK MATRIMONY
An Auspicious Beginning ...
தேதியூர். V.J. ராமன்
ஆத்மார்த்த ஜோதிடர்
9003195599
9445230940

## இராமாயணம் வாழ்வியல்

*சென்றமாத தொடர்ச்சி....*

*அன்பின் மிகுதியால் தம்பியை மகனே என்று அழைத்தார்.*

*தசரதனிடம் எல்லோரும் கனிவாக நடந்துகொள்ள வேண்டும் என்று இராமர் அறிவுரை கூறிவிட்டு சீதையிடம் விடை பெறுவதற்காக வந்தார். அப்போது சீதை தாங்கள் வனம் செல்லவேண்டும் என்ற ஆணை எனக்கும் பொருந்தும். தங்களுடன் அனுசரணையாக வாழ்க்கையை நடத்திக் கொள்வதுதான் எனது முதற்கடமை என்று எனது பெற்றோர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். பிறகு பித்ரு தேவோபவ என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தந்தை சொல்லுக்கு கட்டுப்பட்டு வனம் செல்ல முடிவு செய்தான் இராமன். அவருடன் சீதை இலக்ஷ்மணன் வனம் சென்றனர்.*

*வனவாசத்தில் முதல்நாள் படகோட்டி குகனைச் சந்தித்தான். அவன் இராமனிடம் மிகுந்த அன்பு கொண்டவன் அவனைப் பார்த்த இராமர் நாங்கள் நால்வர் உன்னோடு சேர்ந்து ஐவர் ஆனோம்.* **அன்பு - நட்பு பாராட்டுவதில் ஜாதியோ இனமோ குறுக்கே வரக்கூடாது என்பதுதான் இராமனது அணுகுமுறை.**

*தனது படகின் மூலம் குகன் மூவரையும் அக்கரைக்கு கொண்டு வந்து சேர்த்தான். படகு கூலி என்ன என்று இராமன் கேட்க, அதற்கு பதிலாக நான் உன்னை கரை சேர்த்துவிட்டேன் அதேபோல் நீயும் என்னை கரை சேர்த்துவிடு என்று குகன் கூறினான். உலக பந்தங்களில் இருந்து எனக்கு விடுதலை கொடு என்று வேண்டிக் கொண்டான். இராமர் எல்லாம் வல்ல இறைவன் என்பது குகனுக்கு தெரிந்துள்ளது.*

*முற்றும்.*

**- காந்தாமணி நாராயணன்**

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- ❖ Breast Pumps
- ❖ Blood Glucose Meters
- ❖ BP Meters
- ❖ Alpha Beds
- ❖ Adult Diapers
- ❖ Under Pads
- ❖ Wheel Chairs
- ❖ Physio Products
- ❖ Home Sleep Study
- ❖ Oxygen Concentrator
- ❖ CPAP / Bi Pap
- ❖ Pulse Oxymeters
- ❖ Nebuliser
- ❖ Morning Walker
- ❖ Weighing Scale
- ❖ Air Purifier




**முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.**

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

## வாழ்த்துகிறோம்

**12.02.2023 ஞாயிற்றுக்கிழமை** *அன்று சென்னை, ராஜ கீழ்ப்பாக்கத்தில் ஸ்ரீமதி அர்ச்சனா சதீஷ், சதீஷ் அவர்களின் குமாரனும், வேதபாரதியின் போஷகர் ஸ்ரீ APKT ஸ்ரீதர் ஜி அவர்களின் பேரனுமாகிய* **சிரஞ்ஜீவி. அத்வைத் சதீஷ்க்கு உபநயன ப்ரம்மோபதேசம்** *வேதோக்தமாக நடைபெற்றது. வேதபாரதியின் சார்பில் கலந்து கொண்டு குழந்தையை வாழ்த்தும் பாக்கியம்பெற்றோம். சிறப்பாக வாழ ப்ரார்த்தனை செய்கிறோம்.*

**12.02.2023 ஞாயிற்றுக்கிழமை** *அன்று பாண்டிச்சேரி ஸ்ரீ வி.ராகவன் குமாரன்* **சிரஞ்ஜீவி. ஸ்ரீகிருஷ்ணா சர்மா (எ) மிருணாள் ப்ரம்மோபதேசம்** *நங்கநல்லூரில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. வேதபாரதியின் சார்பில் செயலாளர் கலந்து கொண்டு குழந்தையை வாழ்த்தினார். சிறப்பாக வாழ ப்ரார்த்தனை செய்கிறோம்.*

**03.03.2023 வெள்ளிக்கிழமை** *அன்று வேளச்சேரி வேதபாரதியின் புத்தகக்குழு ஒருங்கிணைப்பாளர்* **ஸ்ரீ ராமன் அவர்கள் இல்ல க்ரஹப்பிரவேச விழா** *குருமார்களின் பரிபூர்ண ஆசீர்வாதத்துடன் மிகச்சிறப்பாக நடைபெற வேதபாரதி மனதார வாழ்த்துகிறது. ஸ்ரீராமன் குடும்பத்தினர் எல்லா வளமும் நலமும் பெற்று வாழ இறைவனை வேதபாரதி வேண்டுகிறது.*

*ஏப்ரல் 29, 30 மற்றும் மே 1 மூன்று நாட்களில் வேதா கேம்ப் கும்பகோணம், கோவிந்தபுரத்தில் நடைபெற உள்ளது.*

*தொடர்புக்கு :* **ஸ்ரீ ராமகிருஷ்ணன் - 99949 26537**

# மழையும் விராடபருவமும்

(செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.எட்., பரமக்குடி)

உலகின் முதல் படைப்பே நீராகும், பிரம்மதேவன் முதலில் நீரையே படைத்தார் என்பதை "ஆபயேவஸ ஸர் ஜாதௌ" என்னும் வேதத் தொடரால் அறியலாம்.

முதல் படைப்பாகிய நீரே உடலுக்கு முக்கியமாக அமைகிறது. இந்நீருக்கு அதிதேவதை வருணனாகும். மழைக்கு அதிதேவதை பர்ஜந்யன் ஆவான். நீரை வழங்கும் இத்தேவதை மிகுந்த சக்தி உள்ளவன் எனக் கருதப்படுகிறான்.

அந்தணர்கள் செய்யும் சந்த்யாவந்தனம் எனும் வழிபாட்டில், 'இமம் மே வருண" எனும் மந்திரமானது நீருக்கு அதிதேவதையான வருணனைப் போற்றுகிறது.

"உருஸகும் ஸமாத ஆயு : ப்ரமோஷி" எனும் தொடரால், 'ஏவருணனே, நீயே நீருக்கு அதிதேவதை, நாங்கள் உன் கருணையை எதிர்பார்த்துச் சரணடைகிறோம். நம்பியவர்களுக்கு அருள்புரிபவனே, செடி கொடிகள், பசு, பறவைகள், புல், பூண்டு முதல் பிரம்மாதி தேவர்கள் வரையும் உன்னையே நம்பி வாழ்கின்றனர். உன்னிடமிருந்தே புறத்தூய்மை, அகத்தூய்மை முதலியவற்றை அடையமுடிகிறது. எனவே மாதம் மும்மாரி பெய்து எங்களின் தாபத்தைப் போக்கி எங்களை நீ காத்திடுக என வருணனை வேதம் துதிக்கிறது.

இதுபோல ருக் வேதத்திலும், ''இதம் ஆப:பரவகத" என்னும் மந்திரம், 'அறியாமையால் மக்கள் செய்யும் தீமையால் கோபமுறாது அதைப் பொறுத்து மழை பொழியச் செய்து எங்களை வளம்

பெறச் செய்வீராக என வேண்டப்படுகிறது.

மேலும், 'யாத்வா அகம் அபிதுத்ரோக'' என்னும் தொடரால் மழை வராமல் இருக்கும் காரணத்தையும், வறட்சிக்குரிய காரணத்தையும் கூறுகிறது.

பசியும், தாகமும் சேர்ந்ததே பஞ்சமாகும், ஸுச்ச திருஷ்ணாச'' என்கிறது வேதம். அதாவது தண்ணீர் இல்லாமையால் பசி, தாகம் ஏற்படும் என்பதாகும்.

தண்ணீர் ஏன் இல்லை?

''அபாச்னும் அபாரஹ: அபாக்ராம் அபசுவாத்திம்'' எனும் தொடரினால் மக்களின் பாவம் மேலிட்டால் மழை வராது என்கிறது வேதம். இதனையே வியாசரும், வில்லியும் ஐந்தாவது வேதமாகிய மகாபாரதத்தில், விராட பர்வமாக மக்கள் அறியுமாறு விவரிக்கின்றார்கள்.

அஸ்தினாபுரத்தின்கண் பீஷ்மர், துரோணர், கிருபர் போன்ற உத்தமர்கள் இருந்தாலும் நாடு செழிப்பாக இல்லையே ஏன்?

தொடரும்.....

## வருந்துகிறோம்

வேதபாரதியின் வேர்களில் ஒருவரான ஸ்ரீமதி காந்தாமணி நாராயணன் அவர்களின் கணவர் ஸ்ரீ நாராயணன் 11.02.2023 இரவு இறைவனடி சேர்ந்தார். அவருடைய இழப்பை தாங்கி நிற்கும் ஸ்ரீமதி.காந்தாமணி குடும்பத்தாருக்கு வேதபாரதியின் ஆழ்ந்த அனுதாபங்கள்.

FORM IV

Statement about ownership and other particulars about newpaper VEDABHARATHI SEITHIGAL as required to be published under Sec. 19--D Sub sec (b) of the Press and Registration of Books Act read with Rule 8 of the Registration of New Papers ( Central Rules ) 1956

| | |
|---|---|
| 1 Place of publication | Chennai |
| 2 Periodicity of Publication | Monthly |
| 3 Printer's Name<br>Nationality<br>Address | R.Gowthama Sankar<br>Indian<br>Sabanayakam Printers,<br>No 39, Millers Road,Kilpauk<br>Chennai- 600 010. |
| 4 Publisher's name<br>Address | R.VENKATARAMAN<br>No 27, F-1 Pillaiyar Koil St,<br>Annai Indira Nagar,<br>Velachery,<br>Chennai- 600042 |
| 5 Editor's Name<br>Nationality<br>Address | R.VENKATARAMAN<br>No. 31, Seshadripuram 7th Main Rd<br>Baby Nagar,<br>Velachery,<br>Chennai- 600 042 |
| 6 Name and Address of News Papers and shareholders holding one percent of the total captial | VEDABHARATHI SEITHIGAL<br>No 27, F-1, Pillaiyar Kovil St.,<br>Annai Indira Nagar,<br>Velachery,<br>Chennai- 600042 |

I,R.Venkataraman, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Chennai - 600042 31-03-2023 ( Sd ) R.Venkataraman

Find Your Partner



Best of Luck

Brahmin Kalyanam.com

BK MATRIMONY.com

An Auspicious Begining...

(Exclusive Portal for Brahmins)

பிராமணர்களுக்கு மட்டும்

REGISTER FREE & GET

Brides / Grooms Profiles +
Free Horoscope Matching + ONE YEAR Validity
Membership Fee Rs. 1000 Only.

Astro Guidance By:
**Thethiyur V J Raman**
Aathmartha Jothidar


89397 02500

brahminkalyanam.com@gmail.com



## தி நியூ லைஃப் சாரிடபிள் டிரஸ்ட்

எண் 31/50, "சாய் பார்க்", பெரியாழ்வார் தெரு, சுந்தரம் காலனி,
கிழக்கு தாம்பரம், சென்னை 600059. போன் : 98841 71172/90582 44435
http://www.newlifecharitabletrust.org





# ஆநிரைகளை பராமரிப்பது ஆண்டவனுக்கு செய்யும் சேவை



ஒவ்வொரு நாளும் வயதான மற்றும் நோய்வாய்ப்பட்ட மாடுகள் கைவிடப்பட்டு அவை பிளாஸ்டிக், காகிதம் போன்றவைகளை உண்டு வேதனையான வாழ்க்கை வாழ்கின்றன.

மனிதர்களுக்கு பால் கொடுத்து வந்த புனிதமான பசுக்கள் இப்படி துன்பத்துக்கு ஆளாகலாமா?

நியூ லைஃப் சாரிடபிள் டிரஸ்ட் (NLCT) இது போன்ற நிராதரவான பசுக்களை மீட்டு எங்கள் **லக்ஷ்மி நிவாஸ்** கோசாலையில் பாதுகாத்து பராமரித்து வருகிறோம்.

தற்போது எங்களிடம் 95 பசுக்கள் உள்ளன.

கோசாலையிலிருந்து பால் அருகில் இருக்கும் வேத பாடசாலை மற்றும் கிராம குழந்தைகள், பெரியவர்களுக்கு கொடுக்கிறோம். விற்பனை செய்வதில்லை.

கோசாலை பராமரிப்பிற்கு 5 ஆண்கள், 2 மகளிர், தீவனம், மருத்துவ செலவுகள் மற்றும் இதர செலவுகள் நன்கொடை மூலமாக கிடைக்கின்றன. கோசாலை பராமரிப்பிற்கு உங்கள் ஆதரவை வேண்டுகின்றோம்.

நன்கொடையை கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு காசோலையாகவோ, ஆன்லைன் மூலமாகவோ செலுத்தலாம்.

**City union bank**
East Tambaram Branch,
Chennai -600059
SB Account No: 500101010797410
IFSC Code: CIUB0000431

Scan the QR Code to make payment thro Google Pay

அனைத்து நன்கொடைகளுக்கும் 80G கீழ் வரி விலக்கு உண்டு.
FCRA ஆல் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தொடர்பு - திருமதி. தீபகலா : +91 98841 71172, 044 - 22399551, 43574464
+91 98841 71172 Office@newlifecharitabletrust.org

எங்கள் கோசாலாவிற்கு வருமாறு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

**Communication Address : S. SREEDHAR, Poomalai Gopinath Blossoms, Villa 3A, Govindan Nagar Main Road, Palavakkam, Chennai - 600041.**
**Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071**
**Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org**



## ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்

*இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்*

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

*என்பது சாஸ்த்ர வசனம்*

*பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.*

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. *அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்*
2. *கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.*
3. *நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.*
4. *மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்*

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**


CUB கீ செயின் டெபிட் கார்டினை பரிந்துரைத்து ஊக்க வெகுமதியை பெறுங்கள்
₹150* வரை
எவ்வாறு செயல்படுகிறது
STEP 1
நெட்பேங்கிங் மற்றும் மொபைல் பேங்கிங் வாயிலாக கீ செயின் டெபிட் கார்ட் வேண்டி விண்ணப்பிக்கவும்
STEP 2
விண்ணப்பிக்கும் போது பரிந்துரைத்தவரின் மொபைல் எண்ணை பதிவு செய்யவும்
STEP 3
கீ செயின் டெபிட் கார்டு டெலிவரி செய்யும் பொது பரிந்துரைத்தவர் மற்றும் பரிந்துரைக்கபட்டவருக்கு ரூ.50
STEP 4
பரிந்துரைக்கபட்டவருக்கு மேலும் ரூ.50 (ஆக்டிவேஷன் செய்து முதல் பரிவர்த்தனை செய்த பின்)
CUB நெட் பேங்கிங், மொபைல் பேங்கிங் மற்றும் இணையதளம் மூலம் விண்ணப்பிக்கவும்
Scan QR Code to Apply
*T&C Apply
RuPay ON-THE-GO
If you are not an existing CUB Customer, Now you can open Savings & Current account instantly through VIDEO KYC
Simply give a missed call to +91 88866 10805 (or) Scan the QR Code
CUB TRUST AND EXCELLENCE SINCE 1904
சிட்டி யூனியன் பேங்க்
www.cityunionbank.com
ராசியான பேங்க், ஈஸியான பேங்க்
Internet/Mobile Banking | Sovereign Gold Bonds | Chat Bot | Cordless Withdrawal | Fastag | Spend Analyzer | Debit and Credit Card | Prepaid/Travel Card | PoS | Social Media Banking | UPI QR Code for Merchants | Online Mutual Fund | Video KYC Online ASBA | WhatsApp Banking Insta Loan | Wallet | Set Card Limit | Green Pin
For Assistance, call our 24x7 Customer Care : 044 7122 5000

RNI No. : TNTAM/2016/73726 REGD No. : TN/CC(S)DN/571/21-23
Date of Publication First Week of Every Month
Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/21-23
Posted at Patrika Chennai, Egmore.
Posted between 1 - 7th March 2023




தரமான நகைகளுக்கு
சரியான முகவரி

சூர்யா ஜீவல்லர்ஸ்® A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To

______________________________

______________________________

______________________________

______________________________

If not delivered please return to
**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.